திராவிடநாடு

21—9—58 | வார வெளியீடு | விலை 16 காசு

# பாரதி முழக்கம்!

உண்மையின் பேர்தெய்வம் என்போம்—அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம்—பிறி
துள்ள மறைகள் கதையெனக் கண்டோம்
கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலில் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்
வடமலை தாழ்ந்தத னாலே—தெற்கில்
வந்து சமன் செய்யும் குட்டை முனியும்,
நதியினுள் ளேமுழு கிப்போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுற வேமணம் செய்த—திறல்
விமனும் கற்பனை என்பது கண்டோம்.
ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும்—ஒன்றில்
உண்மையென் றோதிமற் றொன்றுபொய் யென்னும்
நன்று புராணங்கள் செய்தார்;—அதில்
நல்ல கவிதை பலபல தந்தார்!
கவிதை மிகநல்ல வேனும்—அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்.
புவிதனில் வாழ்நெறி காட்டி—நன்மை
போதிக்கும் கட்டுக் கதைகள் அவைதாம்!!

(பாரதியாரின், "உயிர்பெற்ற தமிழர்" எனும் பாடலின், பகுதிகள் இவை.)

# கேட்டீரா சேதி!

5000-க்கு மேற்பட்ட உலக நாடுகளின் விஞ்ஞானிகள், இந்தக் கிழமை, ஜினீவா நகரில் கூடினர். 69 நாடுகளைச் சேர்ந்த இந்த விஞ்ஞானிகள், விஞ்ஞான உண்மைகளைப் பற்றி, இம் மாநாட்டில் ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டனர். எப்படி அணுசக்தியைக்கொண்டு, ஆக்கவேலைகளில் ஈடுபடலாம் என்பதும் விவாதிக்கப்பட்டது. இப்படி விஞ்ஞானிகள் எல்லாம் கூடிப்பேசி, முடிவுகளைச் செய்துகொண்டால், உலகம் எவ்வளவோ நன்மைகளைப்பெறும். அணுகுண்டுகளைப்பற்றிய பயம் ஒழியும், என்று எங்கும் நம்பப்படுகிறது.

*

செப்டம்பர் 15ந் தேதி முதல், அமெரிக்காவிலுள்ள நியுயார்க் நகரில் ஒரு மாநாடு நடக்கிறது. அகில உலக பெரிய நீர்த்தேக்கங்களின் மாநாடு, என்று இதற்குப் பெயராகும். பெரிய நீர்த்தேக்கங்களைக் கட்டியிருக்கிற நாடுகள், இம் மாநாட்டில் பங்குகொள்ளும். ஹீராகுட் அணைக்கட்டுப் போன்ற அணைகளை, 'இந்தியா'வும் கட்டியிருக்கிறதல்லவா? அதனால், இந்திய உபகண்டத்து இஞ்சினீயர்களும் கலந்துகொள்ளப் போயிருக்கின்றனர்! அந்தப் பட்டியலில் தென்னாட்டைச் சேர்ந்த என்சினீயர் எவருமில்லை. இங்கே, ஏது பெரிய நீர்த்தேக்கம்? இருந்தாலல்லவா, பிரதிநிதி போக!!

*

"எங்கள் கட்சி நிதிக்கு 2000 ரூபாய் கொடுத்தால், உங்களுக்கு பெர்மிட் வாங்கித் தருகிறோம்!", என்று கேரளாவிலுள்ள கம்யூனிஸ்டு கட்சிக் கிளைகள் சொல்லி, அதுபோலச் செய்கின்றன என்று டில்லி பார்லிமெண்டில் டி. எஸ். பட்டாபிராமன எனும்காங்கிரஸ் உறுப்பினர் வெளியிட்டார். தாம், இக்கூற்றை நிரூபிக்கத் தயாரெனறும், அதற்கான சானறுகள் தம் வசம் உள்ளனவெனறும் அவர் தெரிவித்திருக்கிறார். லைசென்ஸ், பெர்மிட் என்று சொல்லிப் பண வேட்டையாடுவது காங்கிரஸ் பிரமுகர்களின் "பிழைப்பு வழியாக" இருந்து வருவது யாவரும் அறிந்ததே! இந்த வியாதி, கம்யூனிஸ்டுகளையும் பீடித்திருப்பதாகப் பட்டாபிராமன் வெளியிட்டுள்ளார்!!

*

இட்லிக்குத் தொட்டுக்கொள்ளுகிறோமே — "சட்னி" அதுகூட இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதாம்! ஆண்டுக்கு $12\frac{1}{4}$-இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 700-டன் சட்னி ஏற்றுமதி செய்யப்படுவதாக அதிகார பூர்வமான அறிக்கையொன்று கூறுகிறது. சட்னிக்கு வெளிநாடுகளில் கிராக்கியிருப்பதால், எப்படியெப்படி இந்த வியாபாரத்தை இலாபகரமாக்கலாம் என்பதுபற்றியும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறதாம்.

*

ஜோகன்னஸ்பர்க்கிலுள்ள விட்வாட்டர்ஸ்ராண்டு பல்கலைக் கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ள சாதனத்தின் மூலம் வலியில்லாமல் பிள்ளைபெறும் வாய்ப்பு அனைவர்க்கும் கிடைக்கும். அந்த நாள் அண்மையிலேயே வர இருக்கிறது.

அழுத்தம் நீக்கப்பட்ட பிளாஸ்டிக் ஆடைதான் அச்சாதனம். இப்புதுச் சாதனத்தால் பிரசவம் சீக்கிரம் ஆவதுடன் வேதனையும் குறையும்.

முதன்முதலாகத் தாய்மைப் பேறு எய்திய 1000 பெண்களுக்கு இச்சாதனத்தை உபயோகித்துப் பார்த்ததில் அவர்களுக்கு வேதனை குறைந்தது. விரைவான பிரசவம், குறைவான வேதனையில் பிறக்கும் அக்குழந்தையும் அதனால் நலம் பெறுவதாகத் தெரிந்தது.

பிரசவிக்கும் பெண்களின் தசைகள் முடக்கப்பட்டு அவர்களின் அடிவயிற்றில் பிரயோகிக்கப்பட்ட வேதனை நீக்க மருந்துபோன்ற முயற்சிகளின் அடிப்படையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் நடத்திய பரிசோதனைகளில் பெண்களின் அடிவயிற்றை நெகிழ்த்துவதால் இலகுவில் வேலை முடியும் எனத் தெரியவந்தது. 1955ம் ஆண்டு இறுதியில் அடிவயிற்றின் முற்பாகத்தை மூடக்கூடிய சிறு அழுத்த நீக்கக்கூண்டைக் கண்டுபிடித்தனர்.

*

நாம் அனைவரும் குழந்தைகளாக இருந்தபோது ஈர மணலில் வீடுகட்டி விளையாடுவதுண்டல்லவா? ஆனால் இன்று மக்கள் வசிக்கக்கூடிய உண்மையான வீடுகள் வெறும் மணலால் கட்டப்படுகிறது என்பது நம்மில் பலருக்குத் தெரியாது.

சமீப ஆண்டுகளில் சோவியத் எஸ்தோனியாவின் தலைநகரான தாலின் நகரில் அதன் சுற்றுப் புறங்களில் ஏராளமான மணல் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்த மணலுக்கு "சிலிகால்ஸ்யேட்" என்று பெயர். சாதாரண மணலுடன் மிகவும் சிறிதளவு சுண்ணாம்பைச் சேர்த்து உருவாக்கப்படும் புதிய கட்டடப் பொருள் இது.

ஜோன்ஸ் ஹின்ட் என்ற விஞ்ஞானி இதை உருவாக்கினார். இதை உற்பத்தி செய்வது எளிது. மேலும் இது மிகவும மலிவானதாகவும், உலோகத்தைப் போன்ற உறுதியுடையதாகவும் உள்ளது.

மணலால் உறுதியான மாளிகைகளைக் கட்ட முடியும் என்பது இப்பொழுது சோவியத் நாட்டில் உறுதியாகிவிட்டது.

இப்பொழுது லெனின்கிராடு கார்கி, காம்ஸமால்ஸ்க்-ஆன்-அமூர் ஒர்யால், காபரோவ்ஸ்க் முதலிய சோவியத் நகரங்களில் சிலிகால்சியேட் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

# வெற்றி நமதே!

மலர் 17] ஆண்டு சந்தா ரூ. 8 [21-9-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 10


"தேசீய உணர்ச்சி கொழுந்துவிட்டெரிகின்ற காலம் இது. பெரிய நாடானாலும் சின்ன நாடானாலும், அங்கங்கே விடுதலை உணர்வுகள் வளர்ந்து வருகின்றன. இதனை, எவ்வளவு பெரிய வல்லரசுகளாலும் அழித்து விடவோ, அடக்கிவிடவோ முடியாது. மக்கள் தம் மனதில், எழுந்துள்ள விடுதலைத் தாகத்தை எவரும் மதித்தே ஆகவேண்டும்"

என்று, ஈராக் நாட்டில் சென்ற சில திங்களுக்குமுன் முடி மன்னன் வீழ்த்தப்பட்டுக் குடியரசு நிறுவப்பட்டது குறித்து உலகம்போற்றும் உன்னத நிலையில் உள்ள பண்டித நேரு அவர்கள் வெளியிட்டார்! அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து மட்டுமின்றி, உள்நாட்டிலேயுள்ள ஆதிக்கச் சக்திகளை வேரறுத்து எழும் புதுமைத் தாகத்துக்கும் தமது ஆதரவு உண்டென்பதைத் தெரிவித்துக்கொண்டார்!!

பண்டித நேரு மட்டுமல்ல, அவரைப்போல முன்னேற்ற எண்ணங்களும் முற்போக்குக் கொள்கைகளும் கொண்ட எவரும், பூத்திடும் புரட்சிகளையும், வெடித்திடும் தேசிய ஆர்வத்தினையும், வாழ்த்தவும் வரவேற்கவுமே செய்கின்றனர்.

கடல் கடந்து வியாபாரிகளாகச் சென்று, சென்ற இடத்தில் தந்திர சாகசங்கள் மூலம் அரியணைகளைப் பெற்று, ஆட்சித் தர்பார் நடத்தினர், பல அந்நியர்கள். இது கடந்த நூற்றாண்டின் கதையாகிவிட்டது. இந்த நூற்றாண்டிலே, அப்படி எங்கெங்கு அந்நியர்கள் ஆதிக்கம் பெற்றனரோ, அவர்களெல்லாம் விரட்டியடிக்கப்பட்டு, ஆங்காங்கே சுதந்திர நாடுகள் முளைத்துள்ளன!

டச்சுக்காரர்தம் பிடியிலிருந்த இந்தோனேஷியாவும், பிரெஞ்சுக்காரர் வசமிருந்த இந்தோ சீனாவும், வெள்ளையர் தம் பிடியிலிருந்த பர்மாவும், இந்திய உபகண்டமும், இதுபோலச் சுதந்திரம் பெற்ற பூமிகளாகும். அந்நியன் ஆட்சியை அகற்றியது மட்டுமின்றி, உள்நாட்டில் அட்டகாசம் செய்த கொள்ளையர் தம் ஆட்சிக்கும் முடிவு கட்டப்பட்டது, எகிப்தில்! மணிமுடி பறிக்கப்பட்டு, ஒருவனின் தேவைக்கு ஒரு தேசம் என்கிற நிலைமாறி, மக்கள்குரலே சட்டம் எனகிற குடியாட்சிக் கோட்பாடு கோலோச்சத் துவங்கி இருக்கிற காட்சிகளைக் கண்ணாரக் கண்டு வருகிறோம்!

அந்நியர் தம் ஆதிக்கத்தை அகற்றுவதும், அட்டகாசம் செய்வோர்களிடமிருந்து மக்கள் மன்றத்துக்கு அதிகாரங்களைப் பறித்துக்கொள்வதும், நியாயமான ஒன்று; நீதியான ஒன்று என்று எல்லோரும் கருதுகின்ற காலம் இது. அப்படிக் கருதினால்தான் அவர்களை உலக மக்கள், உத்தமர்கள், நியாயவாதிகள் என்று ஏற்றுக்கொள்கிறார்கள். நேருவும், அதனால்தான், உலகத்தின் கண்களுக்கு உத்தமராகக் காட்சி அளிக்கிறார்.

•

சின்ன நாடானாலும், அது தன்னைப் பொறுத்த வரையில் சுதந்திரமாக வாழவேண்டும்—அதன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட, எவ்வளவு பெரிய நாட்டுக்கும் அருகதையில்லை — அப்படித் தலையிடுமாயின், உலக சபை, தலையிட்டு நீதி பெற்றுத்தர வேண்டும்—என்கிற அளவுக்கு, இந்த நூற்றாண்டில், பேசப்படுகிறது. சுதந்திரம் என்கிற பெயருக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் நிலைநாட்டவேண்டும் என்கிற பேரார்வம், ஆங்காங்கும் காட்டப்படுகிறது.

மனிதனுடைய அடிப்படை உரிமைகள் பற்றியும், அந்த மனிதன் வாழும் நாட்டின் கவுரவம் குறித்தும், அந்த நாடு சுயேச்சையாக வாழவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும், உலகத் தலைவர்களாயுள்ள ஒவ்வொருவரும் பேசாமலில்லை.

சுதந்திரம்பெற்ற ஒருநாடு, தவியாய்த் தவிக்கிறது என்றால், அதற்குத் துணைபுரிய வல்லரசுகள் முழக்கமிடுகின்றன! என்ன உதவி வேண்டும் என்று அமெரிக்கா ஒரு பக்கமும், நானும் உதவத் தயார் என்று ருஷ்யா இன்னொரு பக்கமும் வரிந்து கட்டிக்கொண்டு கிளம்புகின்றன. இந்த வல்லரசுகள் தவிர்த்துத், தம் சக்திக்கேற்றவகையில், வியாபாரத் தொடர்பு கொள்ளவும், தம்மிடமுள்ள இயந்திரச் சாதனங்களைப் பரிமாறிக்கொள்ளவும் ஒவ்வொரு நாடுகளும் முன் வருகின்றன.

இங்கேயே பார்க்கிறோம், அமெரிக்காவும் ருஷ்யாவும் அளிக்கின்ற உதவிகள் மட்டுமல்ல, ஜப்பானும் உதவுகிறது, ஸ்வீடனும் தன்னாலானதைத் தர முன் வருகிறது, சுவிஸ் நாட்டு நிபுணர்கள் வருகிறார்கள். இப்படி, ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வதும் ஒவ்வொரு நாடும் சுகமாக வாழவேண்டும் என்று எண்ணுவதும், இந்த காலத்தில் மலர்ந்துள்ள ஒரு புதுமையாகும்.

எனவே, புதிதாக ஒரு நாடு சுதந்திரம் பெற்றால் அது எப்படி வாழும் என்கிற ஐயமோ; அதனால்,

உலக நாடுகளுடன் எப்படித் தொடர்பு கொள்ள முடியும் என்கிற பயமோ; தனக்குவேண்டிய உதவிகளை அது எப்படிப் பெற்றுக்கொள்ளும் என்கிற கவலையோ, இன்றைய தினம் ஏற்பட நியாயமில்லை.

இருந்தாலும், காங்கிரஸ் தலைவர்கள், தனிநாடு கோரும் நம்மைப் பார்த்துக் கர்ச்சிக்கிறார்கள் — "திராவிடநாடு தனியானால், உலகத்தில் எப்படி வாழும்? உலகத்திலுள்ள பிறர், எப்படி மதிப்பார்கள்?" என்று. இஸ்ரேல், மிகச்சின்னநாடு! இலங்கை மிகச் சிறிய தீவு! இவைகளுக்கெல்லாம், உலகத்தின் உதவிகள் கிடைக்கின்றபோது, உலகத்தோடு தொடர்புகொள்ளும் சிறந்த அறிஞர்களையும், நெறி நூல்கள் பலவற்றினையும், நிலையான சிறந்த ஆதாரங்களையும் கொண்டிருக்கிற திராவிடத்தால் முடியாதா? நிச்சயம் முடியும்! உலகத்தில் நிலையான இடத்தைப் பெறவும் முடியும்!

எனினும், ஏன், காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள்— தலைவர்களுக்கெல்லாம் தலைவராய், உலக நாடுகளின் உரிமைகளை முரசொலிக்கும் உத்தமராய் விளங்கும் நேரு அவர்கள்கூட, தனிநாடுக்கோரிக்கையைக் கண்டிக்கிறார் என்று எண்ணும்போதுதான் விசித்திரமாக இருக்கிறது. 'திராவிடநாடு' கோரிக்கையை மட்டுமல்ல, தனி மாகாணம் ஒன்று வேண்டும் என்கிற கோரிக்கையைக்கூட நேரு அவர்கள் மறுக்கிறார்! மராட்டிய மக்கள், இரண்டு மூன்றாண்டுகாலமாகத் தங்களுக்கென ஒரு மாநிலம் வேண்டும் என்கிறார்கள் —மறுக்கிறார், நேரு—"அந்தக் கோரிக்கைக்கு மக்களின் பேராதரவு இருப்பதை அறிவேன். எனினும், முடியாது" என்கிறார்! பேராதரவிருந்தாலும், முடியாது என்கிறார், நேரு!!

இப்படிச் சிறு சிறுபகுதிகளாக, மொழியின் பெயராலும், இனத்தின் அடிப்படையிலும் நாடுகள் ஆக்கப்பட்டால், "இந்தியா" சிதைந்துவிடும்—சிதறுண்டுபோய்விடும் என்று காரணம் காட்டுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள். சின்னதானாலும், பெரிதானாலும் எங்கெங்கு தேசிய உணர்ச்சி கொழுந்துவிட்டெரிகிறதோ, அந்த உணர்ச்சிக்குரிய மரியாதை எவரும் கொடுத்தேயாக வேண்டும் என்று ஒருசமயம் முழக்கமிடுகிறார் நேரு! அதே, தேசிய உணர்ச்சி, தனது ஆளுகைக்குட்பட்ட இடத்தில், தோன்றும்போது கண்டிக்கிறார்—'ஆகா, ஊகூ' என்று தாக்குகிறார்— நாடு, துண்டுதுண்டானால், சிதறுண்டுபோய்விடுமே என்று பயமுறுத்துகிறார்!!

"சொல்வது சுலபம்; செய்வது கடினம்" என்கிற பழமொழி, உண்மையாகிறது, நேருபோன்றவர்களிடம்! நீதிகளை, வெகுஎளிதில், மிகஅமைதியாகப் போதிக்கிறார்கள்—ஆனால், தனது ஆளுகைக்குட்பட்ட இடம் என்கிறபோது, அந்தப் போதனைகள், காற்றோடு போய்விடுகின்றன. கண்டிக்கின்றனர்!

*

ஆயிரம் ஏக்கர் நிலம் வைத்து வாழ்ந்த மிட்டாதாரிடம், உன் நிலங்களை ஏழைகளுக்கு இவ்வளவென்று பிரித்துத் தரப்போகிறோம் என்றால் கோபம் வரத்தான் செய்கிறது, மிட்டாதாருக்கு! ஜமீன் ஒழிப்புச் சட்டத்தை விரும்பி ஏற்கத்தான் மாட்டார்கள் ஜமீன்தார்கள். சுதேச மன்னர்களின் பிடியிலிருந்து சிற்றரசுகளை மீட்டபோது, அவர்கள் சீறாமலில்லை! என்ன காரணம்? ஆதிக்கம் புரிந்த எவனுக்கும், அதனால் கிடைத்த சுகபோகங்களையும், இலாபத்தையும் எளிதில் இழந்துவிட மனம் வரத்தான் வராது.

அதே மனோபாவந்தான், நேருபோன்ற காங்கிரஸ் தலைவர்களிடம் இன்றைய தினம் உள்ளது. உரிமைகளைப்பற்றி, ஆதாரங்களை அள்ளியள்ளி வீசிப் பேசுகிறார்கள் — சிறுநாடுகளை மதிக்கவேண்டும் என்று மார்தட்டவும் தவறுவதில்லை—திராவிடநாடு வேண்டும் என்று நாம் சொன்னால், உடனே, கனல் கிளம்புகிறது கண்களில்! குரல் தடிக்கிறது! மிட்டாபோல், ஜமீன்போல, ஆதிக்க ஆசையும், "ஐயோ, போய்விடுமோ?" என்கிற கிலியும் கொண்டு கண்டிக்கவும், எதிர்க்கவும் கிளம்புகிறார்கள்!!

"சாதியாவது, நாதியாவது, எங்கே இருக்கிறது சாதி. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந் நாட்டு மன்னர்கள்" என்று பொதுக்கூட்டத்திலே முழக்கமிடும் வேதாந்தாச்சாரியார், வீட்டுக்குப் போனதும், மகள் வேதவல்லி, பிற சாதிக்கார வாலிபனை விரும்புவது கேட்டு "என்னடி திமிர்? அவன் என்ன சாதி! நாம் என்ன சாதி!" என்று பாயத்தான் செய்கிறார். "ஏழையாவது; பணக்காரனாவது! ஏழை, பணக்காரனில்லாத சமுகமே, எமது குறிக்கோள்" என்று மார்தட்டிப் பேசும் மார்த்தாண்டர், கம்பெனிக்குப் போனதும், வேலையாள் போய் இரண்டு ரூபா கூலியுயர்வு கேட்கிறான் என்றதும் கோபிக்கத்தான் செய்கிறார். இப்படி, என்னமோ தெரியவில்லை—இன்றைய சமுகத்தில், வெளிவேடத்துக்கு ஒன்றும், நடைமுறைக்கு வேறொன்றுமாக ஒரு நிலை வளர்ந்து வருகிறது! வேதாந்தாச்சாரியார்—மார்த்தாண்டர் போன்ற தனி நபர்களிடம் மட்டுமல்ல. உலக வல்லரசுகளாக விளங்கும் அமெரிக்கா ருஷியா போன்றவைகளிடம்கூட, "இரண்டு முகங்கள்" உள்ளன. சுதந்திர சாசனம் என்று பறைகொட்டுகிறது, அமெரிக்கா! சுதந்திர ஒலி கேட்கிறது, ஈராக்கில் என்றால், படைகளை அனுப்புகிறது பாய்ந்து! மனித உரிமைகளை முரசொலிக்கிறது ருஷியா—இம்ரேநாகி போன்ற மனிதர்களையோ, தூக்கிலே தொங்கவிடுகிறது! இதேபோலத்தான், நேரு அவர்களும், ஒரு சமயம் சிறு நாடுகளின் உரிமைகளைப்பற்றிச் சங்கநாதம் செய்கிறார்; சொந்த விஷயம் என்றதும், சங்கநாதம் எல்லாம் போய்விடுகிறது—எதிரிடையாகப் பேசுகிறார்!!

எனினும், இவர்கள் எல்லாம், பெரியவர்களாக, உலகத் தலைவர்களாக, உத்தமர்களாகப் போற்றப்படுகிறார்கள்! புகழப்படுகிறார்கள்!!

ஊருக்கு உபதேசித்துவிட்டு, தன் விவகாரம் என்றால் அந்த உபதேசங்களைக் காற்றில் பறக்கவிடுவோருக்கு, காலம், புத்திபுகட்டத் தவறுவதில்லை! உண்மையும், உரிமைச்சக்தியும், எல்லாத் தடைகளையும் கடந்து வெல்லும். சுயநலக்காரர்களுக்குப் புத்தி போதிக்கும் என்பதை, இவர்கள் உணரவேண்டும்.

எகிப்து, சுதந்திரக்குரல் கிளப்பியபோது எதிர்த்தது அமெரிக்கா. இன்று, நேசக்கரம் நீட்டுகிறது. பாகிஸ்தான் கேட்டபோது, பாய்ந்தார்

(13-ம் பக்கம் பார்க்க)

# வடக்கும் தெற்கும்

கா. ஜ. அறிவுக்கொடி.

தமிழ்நாட்டு மக்களிடம் இருந்து இறக்குமதி வரி ஏற்றுமதி வரி எண்ணெய்வரி தேயிலைவரி காப்பி வரி சிமெண்ட்டுவரி துணிவரி சர்க்கரைவரி புகையிலைவரி தீப்பெட்டி வரி, ஏன் மரணவரி கூடவும் மற்றும் வருமானவரி, இப்படி வரிவரி என்று வசூலித்து வருகிறார்கள் டெல்லி ஆட்சியாளர்.

66-கோடி ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு இப்படித் தமிழ்நாட்டில் இருந்து வசூல் செய்யப்படுகிறது என்ற விபரத்தை டெல்லி சர்க்கார் வெளியிட்ட வரவு செலவு திட்டத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

'தமிழ் நாட்டுக்கு டெல்லி சர்க்கார் 66-ல் 6-கோடியை மட்டும் உதவிப்பணமாகத்தருகிறதென்று நிதியமைச்சர் சட்டசபையில் தைரியமாய்த் தகவல் தந்திருக்கிறார். "தமிழ் நாட்டில் செல்வாணிக்கு" சென்ற 10-ஆண்டுகளில் 135-கோடியை ரூபாய் நாணய மாக்கிவிட்டு இருப்பதாக ரிசர்வ் பேங்க் வெளியிட்ட அறிக்கையில் கூறுகிறது. தமிழ் நாட்டில் 135 கோடியைவிட்டு அதன் மூலம் தமிழ்நாட்டு மக்களின் பொருளையும் உழைப்பையும் 135-கோடி அளவிற்கு டெல்லியார் கொண்டு போய் இருக்கிறார்கள்.

'டெல்லிக்குஎன்ன பணம்வண்டியிலா போகிறது' என்று வசை பாடி வருகிறார் முதலமைச்சர். உண்டியிலாக மாற்றி ரயில்வண்டியில் தபால் கட்டோடு போகிறதென்பதை அறியாத அமைச்சரா அவர்? உதவிப் பணமாகத் தரும் இந்த 6-கோடிதான் எப்படி டெல்லியில் இருந்து தமிழ் நாட்டுக்கு வருகிறது என்ற கேள்விக்கு தக்கபதில் இல்லை. ஆண்டு ஒன்றுக்கு 60-கோடி விதம் கடந்த பத்து ஆண்டுகளில். 600-கோடியை டெல்லியார் தமிழகத்தில் இருந்து கொள்ளையடித்து இருக்கும்போது, தமிழ் நாட்டில் எத்தனை திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

சேலத்தில் இருந்து இரும்பைத் தோண்டி எடுத்து அதில் இருந்துதொழில்படுத்த உருக்குத் தொழிற்சாலையை உண்டாக்கி, அங்கிருக்கும்பாக்சைட்டை பயன் படுத்தி அலுமினிய தொழிற்சாலையை நிறுவலாம். அதன் மூலம் ஏராளமான ஏழைத் தொழிளாளரின் துயரக் கண்ணீரைத் துடைக்கலாம். தென்னகவளத்தை பெருக்கலாம்—என்ற, நமது கூக்குரலை அமைச்சர்கள் ஏன் உணரவில்லை? அந்த முறையில் முயற்சி செய்தார்களா? இல்லவே இல்லை. ஆனால் அங்கே — ஆம் வளங் கொழிக்கும் வடக்கேதான், "இந்திய துணைக்கண்டத்தில் இருக்கும் சர்க்கரை ஆலைகளில் 100-க்கு 92-ஆலைகளும், கான்பூரில் 29-நெசவாலைகளும மற்றும் பல நூற்பு ஆலைகளும் இருப்பதாகவும், மற்றும் எஞ்சினியரிங் தொழிலும் வளர்கிறது" என்று உ.பி. முதலமைச்சர் கூறுகிறார்-பெருமையுறுகிறார். ஆனால் ஆவடியில் மின்சாரக் கருவிகள் உற்பத்திச் சாலையை ஆரம்பிக்கப் போவதாக முழங்கிவந்த அமைச்சர்கள் அத்தொழில் போபால் பகுதிக்கு மாற்றிவிட்டபோது டெல்லியாரிடம் ஏதாவது கூறியிருக்க வேண்டுமே?

உ.பி-யில் எடுத்துவரும் வரி வெள்ளி என்ற மெக்னீஷியம் தமிழ்நாட்டில் மட்டும் கிடைப்பதில்லையா?

அத்தொழிலை ஏன் தென்னகத்தே நிறுவலாமே......? அது பற்றி டெல்லியிடம் எந்த அமைச்சராவது முயற்சி செய்ய முனைந்தார்களா?

"பம்பாய் மாநிலத்தில் 10-லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு 10500-தொழிற்சாலைகளில் அபிவிருத்தி, தொழிலில்முன்னின்றுவேலைசெய்கிறது" என்பதை பம்பாய் தொழில் அமைச்சர் கூறி இருக்கிறார். 'குஜராத்தி பிரதேசத்தில் உள்ள சாக்ராபர், டகாய், ஆகிய நீர்ப்பாசன மின்சார திட்டங்களால் ஏராள ஏக்ராக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கும் என்றும் அவ்வமைச்சர் கூறி இருக்கிறார். ஆனால் நமது முதலமைச்சரோ புதுக்கோட்டையைத்தனிமாவட்டமாக்க முனைந்து வருகிறாரும். ஆனால் காவிரித் தண்ணீர் புதுக்கோட்டைப் பகுதிக்கு அனுப்ப முடியாது. சிறு நதிகள் மூலம் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறி இருக்கிறார். அதே நேரத்தில் தமிழ் நாட்டு காவிரித் தண்ணீர் மலையாளிகளுடைய தேவைக்குப்போக மீதத்தண்ணீர் கடலிலே போய் விழ்கிறதே என்று கேரள முதல் அமைச்சரிடம் உறுப்பினர்கள் கேள்வி கேட்டு இருக்கிறார்கள்.

குஜராத்தியில் உள்ள சாக்ராபர் திட்டத்தால் 1·20 லட்சம் ஏக்க

ருக்குப் பாசன வசதி அளித்தது. மேலும் 6-லட்சம் ஏகருக்கு பாசன வசதி கிடைக்கும். இதன் மூலம் 1·60,000 டன் உணவும், 16,000 டன் பருத்தி உற்பத்தியும் பெருகும் என்று கூறி வருகிறார் உ. பி. முதல்வர், இதுமட்டுமா? கொனியா பிரதேசத்தில் பாக்ஸைட் நிறைய கிடைக்கிறது என்பதால் அலுமினியத் தொழிற்சாலையைத் துவக்கமுடிவு செய்து இருப்பதாக பம்பாய் தொழில் அமைச்சர் கூறி இருக்கிறார். விதர்ப்பா பிரதேசத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலையைத் துவக்கமுயற்சி எடுப்பதாகக் கூறினார்.

பீகாரிலுள்ள பொக்ரா என்ற இடத்தில் நான்காவது இரும்புத் தொழிற்சாலையை துவக்க டெல்லி முடிவு செய்து இருப்பதாகவும் அதற்கான ஆக்கவேலைகளில் முனைந்து வருவதாகவும் இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 50-லட்சம் வரை ஒதிக்கி இருக்கிறார்கள், துர்காபூர் பிலாய் என்ற மிகப்பெரிய தொழிற்சாலைகளும் இங்குதான் நிறுவி இருக்கிறார்கள். 3-லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். 200-கோடிவரை செலவு செய்து பிரமாண்டமான தொழிற்சாலையை பொக்ராவில் நியமிக்க இருக்கிறார்கள் டெல்லியார். இது ஒன்றே வடக்கு வாழ்கிறதென்ற நமது குரலுக்கு சான்றாக அமையும்.

மேலும் தாபிநதிப்பாலம் கட்டுவதற்கு 28-லட்சம் செலவிட்டு வருகிறார்கள். இதனால் ஏராளமான பாசன வசதியால் உணவு உற்பத்தி பெருகும் என்று கூறி வருகிறார்கள் அவ்வமைச்சர்கள்.

1938-ல் மாச்சு 3-ந் தேதியோடு முடியுமட்டும் புதிய தொழிற்சாலை துவங்க பம்பாய் சர்க்கார் 433 லைசென்சுகள் வழங்கியுள்ளதாம். இதில 252 தொழிற்சாலைகள் பம்பாய்நகரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும நிறுவப்படுகிறது. கடந்த 3-ஆண்டுகளில் பம்பாய் மாநிலததில் கூட்டுறவு அடிப்படையில 16, தனியார்துறையில் 3. ஆக 19 சக்கரை சாலைகளும் நிறுவப்பட்டு இருக்கிறதாம். இத்தகவலை பமபாய் தொழில் அமைச்சர் தான தந்திருக்கிறார்.

வடநாடு வாழ்கிறது என்ற கூற்று மறுக்க முடியுமா? எவ்வளவு தொழிற்சாலைகள் எவ்வளவுநீர்ப்பாசன உற்பத்திகள் மின்சார உற்பத்திகள்—வடக்கே, சிந்தித்துப் பாருங்கள்.

தமிழ் நாட்டில் இருந்து கோடி கோடியாய் கொண்டுபோகும் டெல்லியார் எவ்வசதியை அதிகமாய் அளித்திருக்கிறார்கள்? சிந்திரி உர உற்பத்தி சாலைகள், இரும்புத்தொழிற்சாலைகள், தபால் தந்தி, விமான போக்குவரத்து, பாங்க் இன்சூரன்சு, வெளிநாட்டு நாணயத்தின் மூலமும் பிறவும், பல வணிகக் கழங்கள் மூலமும் திரட்டப்படும் 150 கோடிக்கு மேற்பட்டவை தமிழகத்திற்குத் தருவதில்லை.

ஏன் தென்னகத்தை வளமாக்க முடியாது? வடக்கேயே வளமாக்கும் நோக்கம், ஒரு கண்ணிலே வெண்ணெய் ஒருகண்ணிலே சுண்ணும்பா?

கேள்வியை எழுப்பும்போதெல்லாம் பண்டிதர் தரும் பதில் "இந்தியாவை ஒன்றுபட்டு வளமாக்கும் பிரச்சனையை உண்டாக்கும் மூலம்தான் நாடு சுபீட்சமடையும். அதற்கான வேலையை ஆராய்வதுதானேஒழிய இங்கே வறுமை அங்கே செழுமை என்ற புறங்கூறும் சமுதாயத்தாரால் நாடு முன்னேற முடியாது" என்ற பதிலைப் பதமாகத் தந்துவிட்டுத் பறந்துவிடுகிறார். மேலும் சில அமைச்சர்கள் 'தென்னகத்தே நிறைய தொழிலை துவக்க அதற்கு வேண்டிய பொருள்கள் வசதிகள் அங்கு இல்லை' என்கிறார்கள்.

ஏன் உ. பி-யில் எடுத்துவரும் எரிவெள்ளி என்ற மெக்னீஷியம் தென்னகத்தே இல்லையா? விதர்பா பிரதேசத்திலும் பீகாரிலும பொக்ரா பிரதேசத்திலும் துர்காபூர், பிலாய் பிரதேசத்திலும் எடுக்கப்படும் இரும்பும் இரும்பு உருக்குத் தொழிற்சாலையும—அதற்குக் கோடிகோடியாய் கொண்டுபோய் கொட்டும் டெல்லி சேலம் சேர்வராயனமலை, கஞ்சமலைப் பகுதியில் எடுக்கக்கூடாது? தொழிற்சாலையைத் துவக்கக்கூடாது? தோரியம் தென்னகத்தே தேங்கிக் கிடக்கிறது தேவையான அளவிற்கு, மாங்கனீசமும் மாக்னசைட்டும் மங்கிக் கிடக்கிறது தென்னகத்து மண்ணிலே, கொனியா பிரதேசங்களில் பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்களைக்கொண்டு ஆராயும்போது கண்ணாடிபோல் தெரியும் இப்பொருள்களை ஏன் எடுத்துத்தென்னகத்தேவளத்தை உண்டாக்கக்கூடாது டெல்லியார்? திராவிடத்தின் துறைமுகங்கள் மூலம் 33-கோடி ரூபாய் டெல்லி கஜானாவில் போய் விழுகிறது.

தென்னக உற்பத்தியிலேயே தொண்ணூறு பங்கு காப்பிக் கொட்டை விளைகிறது. அதற்குப் போடுகிற வரி போய்ச் சேரும் இடம் டெல்லி. இலங்கையை விட சிறப்பான தேயிலையும், அதிக தேயிலையும் விளைகிற இடம் இங்கேதான். அதற்குப் போடுகிற வரியும் போய்ச்சேருகிற இடமும் டெல்லிதான். இந்தியாவிலேயே மிளகு ஏற்றுமதி செய்யப்படுகிற இடம்தெற்குத்தான், அதன்மூலம் ரூ. 21-கோடியும் போகிற இடம் டெல்லி.

தங்கம் விளையும் பகுதியும், இரும்பு விளையும் பகுதியும், வெள்ளி விளையும் இடமும், மைக்கா மாங்கனீஸ் மாக்சைட் அணுகுண்டுக்குரிய தோரியம் யுரோனியம், இராம்பு ரப்பர் தேக்கு ஏலக்காய் எல்லாம் இந்நாட்டின் கடற்கரை மண்ணோடு கலந்து கிடக்கிறது.

இத்தகைய வசதிகளை டெல்லியார் அறியாததா? பயன்படுத்தலாமே? வளமாக்கலாமே?

இங்கிருந்து கோடி கோடியாய் கொண்டு சென்று, ஏன் வடக்கிலேயே கொட்டி வளமாக்க வேண்டும்? ஆதாரத்தை இப்படி நாம் எடுத்து இயம்பினால் நமக்கு பரிசு, நாடகமாடிகள், நாடுபற்றி அறியாதவர்கள்—இதுதான். இப்படிப்பட்ட ஆதாரங்களை ஆராய்ந்து அடுக்கடுக்காய் நம் அமைச்சர்களுக்கு எடுத்துஇயம்புகிறோம். என்றபோதிலும அமைச்சர்கள் தம்வழியே செல்கிறார்கள்—அந்த வழி கல்லும முள்ளும் காடுமாக இருக்கிறது — வேண்டாம்—நல்லவழி நமக்கிருக்கிறது—இப்படி வாருங்கள் என்று கூறினால், நீ சொல்வதா? நான் கேட்பதா? என்று விதண்டாவாதம் பேசிக்கொண்டே மேலும் வேகமாகப் போகிறார்கள்.

சிறுகதை

# காட்டுமாங்கனி

**கா. வேழவேந்தன்**

தங்கத் தட்டிலே வாரிவைக்கப்பட்டிருந்த வைரக்குவியலை யாரோ குறும்புக்காரர்கள் தட்டிவிட்டு இருக்கவேண்டும். எங்கெங்கோ சிதறிக்கிடந்த தாரகைகள் கண்சாடை காட்டித் தாங்கள் இருக்குமிடத்தைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன. அவற்றின் இடையே நிலவு அழுதுகொண்டே நகர்ந்துகொண்டிருந்தது! ஏன் துக்கம் இருக்காதா? ஏதோ பொருமைச்சக்தி அதன் முகத்தைக் கிள்ளிவிட்டிருக்கவேண்டும்; மூளியாகிவிட்ட தன் முகத்தை வெளியே காட்ட வெட்கப்பட்டு முகில் திரையில் ஒளிந்து ஒளிந்து பயணம் செய்துகொண்டிருந்தது அது. நீர்மட்டத்தின்மேல் பறந்து செல்லும் நாரையைக் கண்டு பாசியிலே ஓடி ஓடிப் பதுங்கிக் கொள்ளுமே கெண்டை மீன்கள், அதுபோல!

தூரத்திலே சில நரிகள்கூடி ஊளையிட்டுக்கொண்டு இருந்தன. பாவம்! இந்தக் காட்டிலே அவற்றின் வயிற்றை நிரப்ப இன்று ஒன்றுமே கிடைக்கவில்லை போலும்! அந்தக் குரல்களில் அவலத்தின் சாயை படிந்து கிடந்தது!

நான் அமர்ந்திருந்த பாறையை விட்டு எழுந்தேன், சுற்றுமுற்றும் பார்த்தேன். ஆடாமல் அசையாமல் மரங்களும் செடிகொடிகளும் நின்றுகொண்டிருந்தன. வாய்மூடிக்கிடந்த அந்த மரங்கள்தாம் என் இந்த மூன்று ஆண்டுகளாக உறவினர்கள்! ஏனோ ஒவ்வொன்றையும் கட்டித் தழுவ வேண்டும்போல் இருந்தது எனக்கு. காரணம் மனிதர்களைப் போல இவற்றில் எந்த மரமும் எனக்குத் துணிந்து துரோகம் செய்வதில்லையே!

மெதுவாக நடந்தேன். தனிமையில் நடந்ததால் பழைய நினைவுகள் உயிர்பெற்று எழுந்து வந்து என் சிந்தனைப் பறையைத் தட்டத் தொடங்கின. சே! அந்த நச்சு நினைவுகளை ஒருகணம் எண்ணிக்கொண்டாலும் இன்று இரவு முழுவதும் தூக்கம்வராதே! என் தலையின் பின்புறத்தில் நானே ஒருமுறை அடித்துக் கொண்டேன். ஆனால்......

இந்தப் பாழும் உலகத்தில் நாம் விரும்புவதெல்லாம் நடப்பதில்லையே! தடாகத்தில் வலையை வீசுபவன் வரால் மீனுக்குத்தான் குறிவைக்கிறான் என்றாலும், சில வேளைகளில் சிக்குவது நீர்ப்பாம்பாகத்தானே இருக்கிறது!

நான் வேண்டாமென்று உதறித் தள்ளிய அந்தக் கொடிய நினைவுகள் காதிலே புகுந்துவிட்ட பூரானைப்போல இதயத்தைப் போட்டுக் குடையத் தொடங்கின.

முதலில் அந்த மாய்மாலக்காரியின் முகம்தான் என் எதிரிலே வந்து நின்றது. எந்த வரிச்சிரிப்பு என்னை வசிகரித்ததோ, அந்த மின்னல் சிரிப்பை நினைக்கும்போதே எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. 'அழகு ஓர் ஆபத்தான ஆயுதம்' என்று யாரோ ஒரு கவிஞன் சொன்னதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். ஆனால் இதை அப்பொழுதே ஆழ்ந்து சிந்தித்திருந்தால்......

அவள் ஒரு நாடறிந்த திரைப்பட நடிகை என்று எனக்குத் தெரியத்தான் தெரிந்தது. என் நண்பன் என்ற பெயரிலே வந்தவன் அவளை அறிமுகப்படுத்திய போது அவற்றையெல்லாம் எங்கே நான் எண்ணிப்பார்த்தேன்? அவளுடைய நிலாமுகமும் கைதேர்ந்த சிற்பி பரிசுக்கெனச் செதுக்கிய சிலைபோன்ற உடற்கட்டும், சுண்டியிருக்கும் பாளைச் சிரிப்பும்தானே என்னை மோகனக் கிறுக்கிலே தள்ளிப் படாதபாடு படுத்தின.

"செல்வம்! உன்னிடம் மட்டற்ற பொருட் செல்வம் இருக்கிறது. உன் இல்லற வாழ்க்கைக்கு ஓர் அழகுச் செல்வம் இப்போது தேவை; அவள் ஏன் மிஸ். நீலாவாக இருக்கக்கூடாது? ஒரு சில வாலிபர்களைப்போல நீ வரதட்சணை வாங்கித்தான் வாழமுடியும் என்றால், பணத்திற்காக ஏதேனும் ஓர் அவலட்சணத்தைத் தேர்ந்தெடுத்து விடலாம். ஆனால் நீயோ பிறவிப் பணக்காரன். உனக்கு ஏனப்பா அந்தக் கவலை. உனக்கு வாய்க்கப்போகிறவளைக் கண்டு மற்ற இளைஞர்கள் பொருமைப்பட வேண்டுமென்றால் நீலாவைத்தான் நீ மணமுடிக்க வேண்டும்."

என் நண்பன் ஒவ்வொரு வார்த்தையையும் தேனிலும் பாகிலும் மாறி மாறித் தோய்த்து என் எதிரிலே வைத்தான். கட்டுக்கடங்காத என் வாலிப உணர்ச்சி அவன் சொல் ஒவ்வொன்றுக்கும் 'ஆமாம்' போட்டது.

இளமையிலே தாய் தந்தையரை இழந்து, இருக்கும் பணத்தைப் பாங்கில்போட்டுக் கல்லூரிப் படிப்பை முடித்திருந்த நான் முதல் வேலையாக நீலாவை எனக்கே உரியவளாக ஏற்றுக் கொண்டேன்! பெரிய மனிதர்களும் நண்பர்களும் ஓட்டல்களிலும் தங்கள் இல்லங்களிலும் விருந்து நடத்தி எங்களை வாழ்வாங்கு வாழ வாழ்த்தினார்கள்.

சென்னையின் சிங்காரப் பகுதி ஒன்றில் ஒரு பங்களாவில் குடியேறி எங்கள் இன்ப வாழ்வைத் துவக்கினோம். என்னை வளைய வளையச் சுற்றி வந்த நீலா ஒரு வழியாக வெளி உலகத்தையே மறக்கும்படி செய்துவிட்டான்! எங்கு போனாலும் இருவரும் சேர்ந்தே போவோம். அப்பொழுதெல்லாம் வெளியிலே சுற்று

வதைவிட வீட்டிலே அவனுடன் இருப்பதைத்தான் அவள் மிகவும் வரவேற்றாள். அவள் காந்தக் கண்களுக்கு இமையும் பிறழாமல் நான் ஆடிக்கொடுத்தேன்.

எங்களுக்கு மணி பிறந்தான். என்னையே அன்னம் வைத்துக் கொண்டு வந்திருக்கிறான் என்று நீலா பூரிப்புடன் சொல்வாள். நான் மகிழ்ச்சியால் என்னை மறந்துவிடுவேன். இன்ப நாட்கள் அல்லவா அவை? பறந்தன!

மணிக்கு மூன்றாம் ஆண்டு பிறந்தது. பிறந்த நாள் விழாவுக்கு யார்யாரோ வந்தார்கள்; இருந்தார்கள்; சென்றார்கள். ஆனால்......

அதைத் தொடர்ந்து நீலாவின் நடைமுறையிலும் ஏதோ இனம் தெரியாத மாறுதல்கள் பிறந்தன. சில நாட்களாக அவள் மட்டும் காரை எடுத்துக்கொண்டு தனியாக வெளியேசுற்றிவரத் தொடங்கினாள். அதேபோல இரவிலும் வெகுநேரம் கழித்து வருவாள். அவள் போக்கே எனக்குப் புரியாத புதிராக இருந்தது.

"ஏன் இப்படியெல்லாம் மாறி வருகிறாய்?" பொறுமையிழந்த நான் ஒருநாள் கேட்டேவிட்டேன். என் கேள்விக்கு அவளிடமிருந்து பதில் கிடைத்தது. பதிலா அது?

"செல்வம்! வீட்டில் ஒரே 'டல்'லாக இருக்கிறது. என் பழைய நண்பர்களின் எண்ணப்படி நான் மீண்டும் சினிமாவில் நடிக்கப்போகிறேன்" இந்த வார்த்தைகளைக் கேட்டதும், வழியிலே படுத்திருந்த செந்தேளை வால்புறத்திலேயே மிதித்தவன் போல் துடித்தேன்.

"வேண்டாம், நீலா இந்த விபரீதம்!" என்று எவ்வளவோ சொல்லித் தடுத்தேன். கெஞ்சினேன்.

மீன் உயிரோடு வாழவேண்டுமென்றுதான் நீர்த்தொட்டியில் பிடித்துப் பிடித்து விடுகிறோம்; ஆனால் சில மீன்கள் துள்ளிக் குதித்து தரையிலே வீழ்ந்து துடிதுடித்து மாளத்தானே செய்கின்றன!

வளர்த்துவானேன்; என் வீட்டுக்காரி மீண்டும் சினிமா உலக சிங்காரியானாள். அவளுக்கு விசிறிகளிடமிருந்து புகழும், எனக்கு நண்பர்களிடமிருந்து அனுதாபங்களும் குவியத் தொடங்கின.

பிறகுதான் நான் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டதாகவே எண்ணினேன். என் உள்ளமே எனக்குத் தீராப்பகைவனாக மாறியது. வெளியே தலை காட்டவே அஞ்சினேன். கால் முறிபட்ட நண்டு வளையினுள்ளேயே ஒண்டிக் கிடக்குமாமே, அதேபோல வீட்டினுள்ளேயே அடைந்துகிடந்தேன். என் நெஞ்சம் எதையெதையோ கொண்டு வந்து போட்டுக்கொண்டு ஜீரணிக்க முடியாமல் திண்டாடியது. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தேன்.

அந்த முடிவுதான் இதோ இந்த மலைச்சரிவுக்கு — நகரவாசிகளே நினைத்துப்பார்க்க முடியாத இடத்திற்கு—மணியுடன் வந்து சேர்ந்துவிட்டேன். இங்கே கொஞ்சத் தூரத்தில் ஒரு குடிசையை அமைத்துக்கொண்டோம். சதிகாரப் பெண்கள் சமுதாயத்தின் வாடையே இங்கே கிடையாது. வேலையாள் வேலன்தான் எங்கள் இருவருக்கும் உற்றதுணை. இங்கு வந்த பிறகுதான் நான் உயிரோடு வாழ்வதாகவே உணர்கிறேன்...

சிந்தனை நீரிலே மூழ்கிக்கிடந்த என்னை "அம்மா, அம்மா" என்ற குரல் வெளியே இழுத்தது. எதிரே பார்த்தேன். என் மணி அழுதுகொண்டே வந்துகொண்டிருந்தான். பின்னால் வேலன் ஓட்டமும் நடையுமாகத் தொடர்ந்து வந்தான். இந்தக் காட்சி அந்த மந்தமான நிலவொளியிலும் தெளிவாகத் தெரிந்தது. "மணி..." என்ற குரலுடன் ஓடிப்போய் அணைத்துக்கொண்டேன். "இந்த 'வைரமணிப் பேழைக்காகத்தானேடா, இந்தச் செல்வம் உயிர் வாழ்கிறான்" என்று சொல்வதுபோல என்னிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளி வந்தது. மூவரும் குடிசைக்குள் நுழைந்தோம்.

* * *

வேனில் வெயில் தன் தீவிரத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. நான் சாரளத்தின் அருகே உட்கார்ந்துகொண்டிருந்தேன். எதிரே சில நூல்கள் சிதறிக்கிடந்தன. ஒன்றை எடுத்தேன். அது ஒரு நாவல். நான்காம் பதிப்பாக வெளிவந்திருந்தது. ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன்.

பரிசுவாங்கும் புலவன் இல்லாததும் பொல்லாததுமாக அரசனைப் போற்றிச் சொல்வானே, அதுபோலப் பெண்களை அர்த்தமின்றி உயர்த்திப் பேசிக்கொண்டே போனான் அந்தக் கதாசிரியன். காதல் கோயிலில் வணங்கத்தக்க தேவதைகள் கன்னியர் என்று அவன் அடுக்கிக்கொண்டே சென்றபோது எனக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"பாவம்! இவன் ஓர் அப்பாவி; மணமாகாதவன்" என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். ஆமாம், மங்கை, காதல், திருமணம் இவற்றைவிட்டால் இந்தக் கதாசிரியர்களுக்கு வேறு நாதியே இல்லைப்போலும். பெண்களை வராத நாவல் ஏதேனும் இருக்கிறதா என்று என் கைகள் தேடின.

வெளியே ஏற்பட்ட சிறு சலசலப்பும் அதைத் தொடர்ந்து எழுந்த இருவர் பேச்சும் என் கவனத்தை மடக்கின.

"சரி சரி. எசமான் உள்ளே இருக்கிறார். இங்கே வந்து மணிகிட்ட அரட்டை அடிக்க இது நேரமில்லே. சொல்லிவிட்டேன்" இது வேலனின் குரல்.

"பொழுதுக்குமா படிச்சிகிட்டு இருக்காரு. நீ வா மணி, நாம்போய் வெள்ளரிக்காய் பறிச்சிக்கிட்டு வருவோம்" அதைக் தொடர்ந்த ஒரு பெண்ணின் குரல்!

எங்கோ கேட்ட குரலாக இருக்கவே வெளியே எழுந்துவந்தேன். அவள் இரண்டொருமுறை இங்கே வந்து ஏதோ காய்கறி கொடுத்துவிட்டுச் சென்றதாக நினைவு. எதுஎப்படி இருந்தாலும் இந்த வார்த்தைகளை உதிர்க்கத்தான் அவளுக்கு எவ்வளவு தைரியம் இருக்கவேண்டும்?

வெறுப்புணர்ச்சியை முகத்தில் தேக்கிக்கொண்டு அவளையே உற்றுப் பார்த்தேன். என்பார்வை அவள்மேல் விழுந்ததும் கூடையைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு ஒண்டி ஒதுங்கி நடக்கத் தொடங்கினாள்.

நான் மணியின் அருகே சென்றேன். "வா, உள்ளே போவோம்" என்று அழைத்தேன்.

"இல்லை, அதோ......அம்மா!" என்று தன் பிஞ்சு விரலைச் சுட்டிக் காட்டினான். அவள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள்.

"ஏய், வேலா! யார் இவள்? இங்கே ஏன் வருகிறாள்?" என்

குரலில் வழக்கத்திற்கு மீறிய ஆத்திரத்தைக் கலந்தே கேட்டேன்.

"எனக்குக் கூட எங்கிருந்து வருகிருள் என்று தெரியாது. கொஞ்சத் தூரத்தில் இவளுடைய வெள்ளரித் தோட்டம் இருக்கிறது; இவள் பெயர் செல்லமாம். நீங்கள் இல்லாத நேரத்தில், இந்த வழியே போகும்போது, இங்கே நம் வீட்டுக்கு அடிக்கடி வருவாள். 'ஆண்களே எப்படிச் சமைக்கிறீர்கள்?' என்று அனுதாபத்துடன் கேட்பாள். பொருளற்றமுறையில் உங்கள் படத்தையும் நூல்களையும் காட்சிப்பொருள்களைப் பார்ப்பதுபோலப் பார்த்துக்கொண்டே இருப்பாள். ஒரு நாள் நீங்கள் சமையல் நன்ருக இருந்தது என்று சொன்னீர்களே நினைவிருக்கிறதா? அன்றைய சமையல் செய்யும்போது எப்படிச் சமைப்பது என்று சொல்லிக்கொடுத்தவள் அவள்தான். அதுமட்டுமல்ல, தினந்தோறும் மணியை......"

"அவள் பின்னலே அனுப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிருய் போலும்! சீ, முட்டாள்! உன்னை இதற்காகத்தான இங்கே வைத்திருக்கிறேன்? சமையல் தெரியவில்லை என்ருல் வேருெரு சமயற்காரனை அழைத்துவந்தால் போகிறது. இவள் ஏன் இங்கு வரவேண்டும்? கவனத்தில் வை! இனிமேல் இங்கே நான் இவளைப் பார்க்கக் கூடாது. ஆமாம்......" சடசடவென்று பொரிந்து தள்ளிய நான் விவரிக்க இயலாத ஆத்திரத்துடன் மணியை இழுத்துக் கொண்டு உள்ளே போனேன்.

*

மாலைக் கதிரவன் தெளித்திருந்த மஞ்சள் கதிர்கள் பச்சை நிற இலைகளுடன் உறவாடிக்கொண்டிருந்தன. பக்கத்திலிருந்த டவுனுக்குச் சென்று கால்நடையாகவே திரும்பிக்கொண்டிருந்தேன்.

எங்கோ கொஞ்சம் தூரத்தில் மரங்களிலிருந்து இரண்டு குயில்கள் மாறி மாறிக் கூவிக்கொண்டிருந்தன. நடையிலே எந்தவித ஆர்வமுமின்றி நடந்துகொண்டிருந்தேன்.

கையிலே இருந்த பொம்மைகளையும் பொட்டலங்களையும் பார்க்கும்போது மட்டும் என் கால்கள் விரைந்து சென்றன. காரணம் மணியின் நினைவு என்னை அந்த வேகத்திலே இழுத்துச் சென்றது.

எங்கள் குடிசைக்குக் கொஞ்சத் தூரத்திலும் வந்துவிட்டேன். தான் அனுப்பிய கதிர்களை வாரிச் சுருட்டிக்கொண்டு கதிரவன் மலைகளுக்கிடையே ஓடி ஒளிந்து கொண்டிருந்தான்.

குனிந்து கொண்டே நடந்து வந்த நான் திடீரென்று எதிரே நோக்கினேன். அந்தக் காட்சியைக் கண்டதும் என் கண்கள் தாளுகச் சுருங்கின. அங்கே ஒரு ஜீப்கார் நின்றுகொண்டிருந்தது! என் பார்வையை மேலே செலுத்தினேன். எங்கள் குடிசைக்குக் கொஞ்சம் தொலைவில் நாலைந்து பேர் நின்றுகொண்டிருந்தது தெரிந்தது.

கொஞ்சத் தூரத்திலிருந்தே உற்றுக் கவனித்தேன். யாரோ வேட்டைக்கு வந்த சீமான்கள் வேலனுடனும் மணியுடனும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சரி மிஸ்டர். நாதன்! பெரிய கைகாரன் போலிருக்கிறது இந்த ஆள்! அதனுல்தான் அசைந்து கொடுக்கமாட்டேன் என்கிருன். நமக்குத் தேவை அந்தப் பையன். அந்தப் 'போர்ஷ'னில் நடிக்க இந்தச் சிறுவன்தான் தகுதியாக இருப்பான். அதனுல் அந்த மனிதன் எவ்வளவு கேட்கிருனே அந்தத் தொகையை எறிந்துவிட்டுப் பையனை அழைத்து வாருங்கள்!" இந்தக்குரல் கொஞ்சத்தூரத்தில் தாழ்ந்திருந்த ஒரு மரக்கிளையிலிருந்து ஒலித்தது.

என் பார்வை அங்கே தாவியது. கண்ணிலே கருப்புக் கண்ணுடி, உதட்டிலே இரத்தச் சாயம், இத்யாதி கோலங்களுடன் ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டிருந்த ஒரு மங்கை அங்கிருந்த ஒரு மனிதருக்குக் கட்டளை இட்டுக்கொண்டிருந்தாள். அவளை அடையாளம் கண்டுபிடிக்க எனக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை. அவள்தான் என் மாஜி மனைவி—நீலா! நான் பிடித்திருந்த மரமே மலைப்பாம்பாக மாறிவிட்டதாக ஒரு பிரமை.

நான் அவளைக் கண்டுகொண்டேன். ஆனுல் அவள் தான் பெற்ற செல்வனை அடையாளம் தெரிந்துகொள்ளவில்லை. விலைக்கு வாங்கத் துணிந்துவிட்ட அவள் ஆணவத்தைக் கண்டு எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. விரைந்து சென்று அவள் முகத்திலே ஓங்கி ஓர் அறைகொடுக்க என் கைகள் துடித்தன.

"அம்மா, தாயே! பணக்காரப் பரதேவதை, உனக்குப் பணம் இருக்கிறதே ஒழிய, புத்தி இல்லையே! நாங்கதான் குழந்தையை பார்க்கக்கூடாது என் இரேம். நீ கீரை வாங்குவது மாதிரி விலைக்கல்லவா கேட்கிறே. உன் பணத்திமிர் உன்னோடு இருக்கட்டும். முதல்லே இந்த இடத்தைக் காலிபண்ணு."

இந்தச் சூடான வார்த்தைகளை நான் உதிர்க்கவில்லை! எதிரே சேலையை வரிந்துகட்டிக்கொண்டு வந்த செல்லம் பொழிந்துகொட்டிஞள். அவள் பதில் என்னையே திகைக்கவைத்தது. நான் அதிர்ந்தே போனன்.

ஆனுல் இன்னும்கூட நான் மறைந்திருந்த மரத்தின் பின்புறமிருந்து வெளிவர எனக்குத்தைரியம் வரவில்லை. அந்தச் சீர்கெட்ட சினிமாக்காரியிடம் நான் யார் என்பதை ஏன் காட்டிக்கொள்ள வேண்டும்?

செல்லத்திற்கும் நீலாவிற்கும் இடையில்தான் எவ்வளவு இடைவெளி? காட்டு மாங்கனி எட்டிக் கனியைப்போல அழகாக இல்லைதான்; ஆனுல் தின்பவரின் உயிரைத் தீர்த்துக்கட்டுவதில்லையே!

கொஞ்ச நேரத்தில் அவர்கள் எல்லோரும்போய் காரில் ஏறிக் கொண்டார்கள். கார் பறந்தது.

நான் குடிசையை நெருங்கினேன். மணி செல்லத்தின் அரவணைப்பில் இருந்தான். என்னைக் கண்டதும் அவள் மணியைக் கீழே இறக்கிவிட்டாள்.

"இங்கே வரக்கூடாது என்றீர்கள், வந்துவிட்டேன்--மன்னித்து விடுங்கள். இனிமேல் வராமல் போய்விடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள் செல்லம்.

'எங்கே போகிருய், செல்லம்? நீ போய்விட்டால் என் மணியை நான் ஒருநாள் இழந்தேவிடுவேன்' என் வாயிலிருந்து இந்தச் சொற்கள் வருவதற்குள் என் கைகள் அவள் கைகளைப் பிடித்து நிறுத்தின.

தாவி ஓடிவந்த மணி தெரிந்தோ தெரியாமலோ அவள் முந்தானைத் தலைப்பையும் என் வேட்டித் தலைப்பையும் முடிந்து கொண்டிருந்தான்.

# அனாதை

உள்ளத்திற்கு உவகை ஊட்டும் அந்தக் கன்னியின் கட்டழகை ஒரு கவி கண்டிருந்தால், கவிதைகள் பல எழுதியிருப்பான்— சிந்தைகவர் அந்தச் சித்திரப் பாவையின் அங்கங்களைச் சின்னா பின்னமாக்கிப் பாயிரம் பல பாடியிருப்பான் — அவ்வளவு அழகு அவள்.

சதிராடும் கருவிழிகள், இசை பாடும் செவ்விதழ்கள், அன்ன நடை, சின்ன இடை, பின்னல் சடை.

அவளைக் கண்ட, என் கண்கள் வேறு எந்தப் பொருளிலும் அழகைக் காணவில்லை; ஏன் வேறு எதையுமே நாடவுமில்லை.

பலமுறை படித்தாலும் பாடங்களைப் பதியவைக்க முடியாத என் மனதில், மூன்று நாட்களாக பார்த்துக்கொண்டிருந்த அந்த உருவம் எப்படியோ பதிந்துவிட்டது. மறக்க நினைத்துக் கண்களை மூடினாலும் மனக்கண்ணில் தோன்றும் அவள் உருவம் என்னைப் பார்த்து ஏளனம் புரிவதுபோல் இருந்தது.

அவள் யார்? அவள் பெயர் என்ன? எனக்கே சரியாகத் தெரியாது! பேசியிருந்தால் அல்லவா தெரிந்திருக்கும். அவள் அல்லிக் குளத்திற்கு வருவாள் — நீர் மொண்டு செல்வாள். முதல் நாள் நீர் மொண்டுவிட்டு அல்லி மொட்டு ஒன்றை என்னைப்பார்த்தவாறே இள்ளிக் கூந்தலில் செருகினாள் — அந்தப் பூவோடு என் உள்ளத்தையும் அப்படியே செருகிவிட்டாள்—அன்று முதல் என்நிலை எனக்கே புரியவில்லை.

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அவள் யார்? நான் யார்? நானோ இண்டர் வகுப்பில் படிக்கும் மாணவன், தோட்டக்காரன் மகன். அவள்! அந்த எழிலூரில் ஒரு பெரிய பணக்காரரின் மகள்!

என்னை அறியாமல் ஓர் உணர்ச்சி என்னை அவள்பால் ஈர்த்தது. ஒரு சமயம் இதுதான் காதலோ என்றுகூட எனக்குத் தோன்றிற்று. பல சினிமாப் படங்களையும், செய்தித் தாள்களையும், வார இதழ்களையும் படிக்கும் எனக்கு இது ஏதோ ஒரு புதுவித உணர்ச்சியாகவே தென்பட்டது. அந்த உணர்ச்சியே ஆசை, அவா, அன்பு இவை வளரவளரத்தான் காதலாகும் என்று எனக்குப் படித்த கதைகள் நினைவுபடுத்தின. ஆனால் என் மனம் ஏனோ ஏற்றுக்கொள்ளவில்லை.

அவள் நிலையையும்என் நிலையையும் சிந்தித்துப்பார்த்தேன்; மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடுதான் தோன்றிற்று: ஏன் பூலோகத்து அல்லி வானுலகச்சந்திரனை

**ச. இராமலிங்கம்**

காதலிக்கவில்லையா? இப்படியும் ஒரு கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. ஆனால் அது கவியின் கற்பனை. வாழ்க்கைக்கு ஒவ்வாதது. ஆம் அன்பு, காதலாக மலரும் என்றால், இதுபோன்ற இரண்டு துருவங்களுக்கும் இடையே ஏற்பட முடியாது. ஏற்பட்டாலும் சமுகம் ஏற்காது, சமுகம் ஏற்பதுபோல் பாவனை செய்தாலும் வாழ இடந்தராது.

ஏன் இந்த எண்ணங்கள்? இன்னும் இரண்டு நாட்களிலே எழிலூரைவிட்டுச் சென்னைக்குப் புறப்படப்போகும் எனக்கு ஏன் இந்த உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்கள்? சிந்தித்தேன், வெண்ணிலாவை மறைக்க நினைக்கும் மேகங்கள்போல் என் உள்ளத்தையும் சிறிது மயக்கமுறச் செய்துவிட்டது இங்கு நடந்த சம்பவங்கள்,

இப்படி எண்ணங்கள் வேரூன்றி என உள்ளத்தில் வளர்ந்த காரணத்தாலோ என்னவோ கனவு மலர்கள் பூத்துக் குலுங்க ஆரம்பித்துவிட்டன.

இப்படி என் மனம் எப்போதும் கனவு உலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

"தம்பி... தம்பி"

யார் அது? என்று கனவுலகிலிருந்து விழித்துத் திரும்பிப் பார்த்தேன்.

எனக்குத் தெரியவில்லை, புதிய முகம்.

"தம்பி உன்னை இன்றிரவு எட்டு மணிக்கு அவர் தோட்டத்திற்கு வரச் சொன்னார், என் எசமானர்?

எனக்குச் சிரிப்பு வந்தது? வந்திருக்கும் ஆளே யார் என்று தெரியாதபோது, அவன் எசமானர் யார் என்று எப்படித் தெரியும்?

"ஏன் தம்பி சிரிக்கிறீரே! இது பெரிய இடத்து விஷயம், அந்த ஐயா வா என்றால் வரவேணும், போ என்றால் போகணும்; உனக்கு ஒண்ணும் தெரியாது. உன் அப்பனைக் கேட்டுப்பாரு"

"ஐயா நீங்களே யார் என்று தெரியவில்லை; உன் எசமானர் எனக்கு எப்படித் தெரியும்?"

"அப்படியா தம்பி! இந்த ஊர் புதுப் பணக்காரர் இருக்கிறாரே, கருணாகர முதலியார், அவர் வரச் சொன்னார்—அதுதான் தம்பி—நீ கூட அடிக்கடி பார்த்திருக்கிறாயாமே அவர் பொண்ணை-அல்லிக் குளத்தண்டை" என்றார்.

எனக்கு உடனே தூக்கிவாரிப் போட்டது. உடலெல்லாம் சில்லிட்டுவிட்டது. ஒருசமயம் நான் அவள் அழகைப் பார்த்து ரசித்ததை அவள் தவறாக எண்ணித்

தன் தந்தையிடம் சொல்லி விட்டாளோ? எனக்கு என்றுமே தோன்றவில்லை.

"சரி நீ போ வருகிறேன்" என்று சொன்னேன்.

"தம்பி நினைவிருக்கட்டும்! பெரிய இடத்துப் பொல்லாப்பு வச்சுக்காதே...... வரலே......... அப்புறம்......" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

"பெரிய இடத்து விஷயம்"

உண்மைதான், அவளோ கொம்புத் தேன்; நான் முடவன் நிலையில் இருக்கிறேன். இந்த நிலையில் இவ்வளவு நேரம் முட்டாள் தனமாக எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தேன்; என்ன அறிவீனம்?

இன்று இரவு எட்டு மணிக்கு அவர் தோட்டத்திற்குப் போக வேண்டும். எதற்காகக் கூப்பிட்டிருப்பார், அன்போடு கூப்பிட்டிருந்தால் வீட்டிற்கு அல்லவா கூப்பிட்டிருப்பார்!

"எதிர்பாராத முத்தத்தில்" பொன்முடியின் நினைவு வந்தது. ஐயோ! என் நிலை! நான் அவளை காதலிக்கிறேன் என்று சொல்லக் கூட இல்லையே! அவளோடு இதுவரை பேசினதுகூட இல்லையே! அவளைப் பார்த்தது ஓர் குற்றமா? அவளும்தானே பார்த்தாள்! அவள் பார்க்கவே நானும் பார்த்தேன்! இதில் என்ன தவறு?

போவதா, போகக்கூடாதா என்ற சிந்தனையிலேயே இரண்டு மணி நேரம் கழிந்துவிட்டது. குறித்த நேரமும் நெருங்கிக்கொண்டிருந்தது. போகவில்லை என்றால் என் தந்தையிடம் ஏதாவது சொல்லிவிடுவார்களா என்ற அச்சம்! போனால் பொன்முடியின் கதி தானா!

இந்த நிலையில் தந்தைக்கும் தெரியாமல் சென்னைக்கே ஓடிவிடலாமா என்றுகூட யோசித்தேன். எப்படியும் போனாலும் போகாவிட்டாலும் என் தந்தைக்கு இந்தச் செய்தி எந்தவிதத்திலாவது தெரிந்துவிடும். இனி இதை மூடி வைத்து என்ன பயன்! நான் செய்தது குற்றமாயின அதன் விளைவால் வரும் இன்னல்களைத் தாங்கத்தானே வேண்டும்.

சரி, நான் போய் அந்தப் பணக்காரரிடம், உங்கள் பெண்ணை எந்த விதக் கெட்ட எண்ணத்துடனும் நான் பார்க்கவில்லை என்று சொல்வது-நம்பினால் நம்பட்டும்! இல்லையென்றால் அதன் பலனை ஏற்கத்தான் வேண்டும்.

ஏழையென்றால் ஒருபெண்ணைப் பார்க்கக்கூடவா உரிமையில்லை—ஆம், எப்படி இருக்கமுடியும்? காடு போன்ற நிலத்தைக் களைந்து சிங்காரப் பூங்கா ஆக்கும் தோட்டக்காரன் மகனுக்கு எப்படி உரிமை உண்டு? தோட்டத்தில் பல வண்ணப் பூக்களை மலரச்செய்யும் செடிகளைப் பராமரிக்கும் என் தந்தைக்கே அதைக்கிள்ளி அதன் அழகை அனுபவிக்க, மணத்தை நுகர உரிமையில்லையே — அவ்வளவு தாழ்ந்தவர்கள் இல்லையா? கேவலம், ஒரு தோட்டக்காரன் மகன் ஒரு பெரிய பணக்காரரின் பெண்ணைப் பார்ப்பதா? கூடாதுதான்!

இப்படி எண்ணிக்கொண்டேதான் அந்தப் பெரிய பணக்காரரின் வீட்டுத் தோட்டத்தை அடைந்தேன். அங்கே அதே ஆள் காத்துக்கொண்டிருந்தான். "போய் அந்தப் புளியமரம் பக்கத்தில் இருக்கும் பெஞ்சில் உட்காரு தம்பி! ஐயா வந்திடுவாரு, நான் போய்ச் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று அவன் வீட்டின் உள்பக்கமாகப் போய்விட்டான்.

நான் மெதுவாக அந்த ஆள் சொன்ன புளியமரத்துக்குப் பக்கத்தில் சென்றேன். அங்கே ஒரு பெஞ்சும் இருந்தது. அதில் மெதுவாக அமர்ந்து, பத்தாம் நாள் நிலவின் ஒளியில் பார்த்தேன். புளியமரத்தின் அருகில் ஏதோ கயிறு சுருளாக வைக்கப்பட்டிருந்தது.

நான் திடுக்கிட்டேன்— இருதயமும் துடிதுடித்தது. மெதுவாக இன்னும் சுற்றுமுற்றும் பார்த்தேன்; பயத்தினால் எனக்கு அழுகைகூட வந்துவிட்டது. பெஞ்சின் மற்றொரு ஓரத்தில் மாட்டை அடிக்கும் சவுக்கு இருந்தது. சரி இனறு இரவு நாம் திரும்புவது அவ்வளவுதான்! எனன நேர்ந்தாலும் இனித் தந்தையின் கண்களில் விழிக்கவே கூடாது. என்று எண்ணிக் கொண்டு அந்த கயிற்றையும் சாட்டையையும் மாறி மாறிப் பார்த்தேன். அப்போது ரேடியோவிலிருந்து ஏதோ மெல்லிய இசை கேட்பதுபோல் இருந்தது. கூர்ந்து கேட்டேன் "அன்புக் கயிறு இதுதான் அறுக்க யாராலும் ஆகாதய்யா......" எனக்குச் சிரிப்பு வந்தது. எது அன்புக் கயிறு? இதுவா? என்று மெதுவாக எழுந்து அந்தக் கயிறிடம் சென்றேன், அப்போது யாரோ வரும் சப்தம் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பினேன்—அதே ஆள் வந்து நான் கயிற்றைப் பார்ப்பதைப் பார்த்து "என்ன தம்பி பார்க்கறே — மூணு நாளா ஒரு புதுக்காளை கொஞ்சம் இடக்குப் பண்ணிக்கொண்டே வருது, அதற்குத்தான் இந்தப் புதிய கயிறும் சவுக்கும்" என்று சொல்லிவிட்டு தோட்டத்தின் மறுபக்கத்திற்குப் போய்விட்டான்.

"மூன்று நாட்களாகப் புதிய காளை" நம்மைத்தான் மறைமுகமாகச் சொல்கிறான் என்று தெரிந்துகொண்டேன்! இனி இன்னும் என்ன ஆதாரங்கள் வேண்டும்! இனிப் பொன்முடியின் கதி தான்! அதோடு சென்னைக்கு ஓடி விடுவது! என்று யோசித்துக் கொண்டு பயத்தினால் கண்களில் நீர் மல்க, வரும் வழியையே பார்த்துக்கொண்டு அந்தப் பெஞ்சில் அமர்ந்தேன். கண் கலங்கி இருந்ததால் எதிரே காணும் உருவமெல்லாம் மங்கலாகவே தெரிந்தது. அந்த ஆள் சொன்ன "பெரிய இடத்து விஷயம் — பொல்லாப்பு எதற்குத் தம்பி" என்று சொன்னதும் ஒலித்துக்கொண்டிருக்கவே, கண்ணிருந்தும் குருடன் போல், காதிருந்தும் செவிடன் போல் அமர்ந்திருந்தேன்.

ஏதோ சல சலப்புக்கேட்டது உற்றுக் கவனித்தேன் — அவள் தான்! எவளைக் காணக்கூடாது என்று நினைத்தேனோ, அவளே வந்தாள்—அழகு பிம்பம் அன்ன நடை பயிலுவதுபோல் அசைந்தாடி வந்தாள்! முன்னே வரும் அழகு பின்னே வரும் ஆபத்தைக் குறிக்கிறது என்று நினைத்துக் கொண்டே அவளைக் கண்டுகொள்ளாமல், அவள் பின்னால் அந்தப் பணக்காரர் வருகிறாரா என்று பார்த்துக்கொண்டிருந்தேன் — அவள என்னை நெருங்கினாள் — நான் எழுந்து நின்று அவள் வந்த வழியின்மீதே விழிவைத்து நின்றேன்.

"உட்காரலாமே..."

"கண்ணியம் குறைந்துவிடும்".

"நான் பெண்தானே..."

"இருப்பினும் நீங்கள் செல்வந்தர் மகள்..." என்று அவள் வந்த வழியையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

"என்ன பார்க்கிறீர்கள்! யாரை யாவது எதிர்ப்பார்க்கிறீர்கள்"

"ஆம் என்னை அழைத்தவரை..?

"நான்தானே வரவழைத்தேன்" என்று குழைந்து மெதுவாக நிலம் நோக்கிச் சொன்னாள்.

"என்ன நீங்களா! உங்கள் தந்தை கூப்பிட்டதாக..."

"ஆமாம்! நான் கூப்பிட்டேன் என்றால் எங்கே வராமல் போய் விடுவீர்களோ என்று..."

"என்னால் நம்பமுடியவில்லை..."

"இல்லை...... இது உண்மை— தந்தை இரண்டு நாட்களாக ஊரில் இல்லை...அதனால்தான்..."

"நீங்கள் செய்வது..."

"நீங்கள் என்று சொல்வதை விட என் பெயர் சொல்லியே அழைக்கலாம். என் பெயர் அல்லி"

"அழைக்கலாம்... ஆனால்..."

"ஆனால்... என்ன?..."

"நீங்களோ செல்வந்தர் மகள்; நானோ ஓர் ஏழை மகன்"

"அதனாலென்ன... அத்தான்"

"அத்தான்!! அம்மையே நீங்கள் செய்வது யாவும் விபரீதமாக இருக்கிறது—என்னை மன்னித்து விடுங்கள்"

"அத்தான் — நான் செய்வது என்ன விபரீதம்—மூன்று நாட்களாக உங்களை அல்லிக்குளத்தருகில் கண்டேன்—என்னை அறியாமல் ஓர் உணர்ச்சி என் உள்ளத்தில் ஏற்பட்டுவிட்டது. என்றும் எப்போதும் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கவேண்டும்போல் இருக்கிறது......"

"அம்மணி நீங்கள் உணர்ச்சி வசப்பட்டுவிட்டீர்கள் — அதனை அடக்கவேண்டும் — கட்டுப்பாடு வேண்டும்..."

"உண்மைதான் நீங்கள் சொல்வது. நான் இதுவரை கண்டறியாத உள்ளக் கிளர்ச்சியல்லவா ஏற்பட்டிருக்கிறது அத்தான், இனி நீங்கள்தான் இதற்கு......" என்று நெருங்கி அவன் கையைப் பிடிக்கப்போனாள்.

"அல்லி......நீ வாழ்க்கையை விளையாட்டாக நினைக்கிறாய்...... வாழ்க்கை நீ நினைப்பதுபோல் அவ்வளவு சுலபமாக முடியச் சமுகம் இடம் தராது! நீ என்னை விரும்பலாம்! நானும் உன்னைக் காதலிக்கலாம்! ஆனால் இருவரும் சேர்ந்து வாழமுடியுமா! அதுதான் நம் வாழ்க்கையின் பிரச்னை!

"ஏன் முடியாது?......"

"அல்லி நீ நினைப்பதுபோல் இன்றைய சமுகம் இல்லை. ஜாதி வேற்றுமை, பாட்டாளி பணக்காரன் என்ற வித்தியாசம் போன்ற பாசிகள் சமுகம் என்னும் தரையின் மீது படர்ந்து இன்றுவழுக்கு நிலமாகச் செய்திருக்கிறது. ஆகவே இதுபோன்ற வழுக்கு நிலத்தில், நாம் நடந்து செல்ல முடியாது, நீ சொல்லும் நிலையில்!"

"அத்தான்! இன்றையதினம் எவ்வளவோபேர்கள் இப்படி வாழும்போது நாம்மாத்திரம் வாழமுடியாதா?"

"எப்படி வாழ்கிறார்கள் அல்லி! நான் உன்னைக் காதலிக்கிறேன் என்றே வைத்துக்கொள் — உன் தந்தை இதற்குச் சம்மதிப்பாரா"

"சம்மதிக்கமாட்டார்..."

"சம்மதிக்கவில்லை என்றால் நாம் எப்படி வாழமுடியும்— ஒளிந்து மறைந்து வாழச் சொல்கிறாயா?"

"ஆமாம் அத்தான்! இன்றைய செய்தித்தாளில்கூடப்படித்தேன். இருவர் தாய் தந்தையர்களுக்குத் தெரியாமல் ஓடிவிட்டார்கள் என்று"

"அல்லி — நீ அறியாப்பருவத்தினள்! இதைப்போன்ற செய்தித்தாள்களைப் படித்து நீ இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்"

"ஆமாம் நாமும் ஏன் ஓடிவிடக் கூடாது"

"அல்லி எங்கே ஓடிவிடுவது— நீ உன் தந்தையின் கண்களினின்று தப்பலாம். ஆனால்சமுகத்திலிருந்து வேறு எங்கும் ஓடிவிட முடியாது. நீ சமுகத்தில் ஒரு அங்கம் என்பதை நினைவில் வைத்துக் கொள். சமுகத்தோடு ஒத்து வாழ்ந்தால்தான் நம்மால் வாழ முடியுமே தவிர, எதிர்த்து வாழ முடியாது..."

"இன்றையதினம் எதிர்த்து வாழ்பவர்கள் இல்லையா!"

"இல்லையென்றுசொல்லவில்லை; ஆனால் அவர்களுக்குப் பண வலிமை உண்டு"

"ஏன் நானும் பணம் எடுத்துக் கொண்டு வருகிறேன் — எனக்காகச் செய்திருக்கும் நகைகளே பத்தாயிரம் ரூபாய் பெறும்"

"அல்லி! நான் பணத்திற்காகச் சொல்லவில்லை — நீயோ இளம் பெண் உன் வயது......"

"பதினாறு ஆகிறது"

"பதினாறு ஆகிறது என்கிறாய்! இந்த நிலையில் நான் உன்னுடன் ஓடிவந்துவிட்டால், நான் உன்னைக் கடத்திவந்துவிட்டதாகக் குற்றம் சாட்டப்படும் — சிறைவாசம் அளிக்கப்படும்..."

"அத்தான்....அதெல்லாம் சொல்லாதீர்கள்"

"அல்லி—நான் சொல்லவில்லை. இப்படித்தான் சட்டம் சொல்லுகிறது! ஆகவே அல்லி—நீயே யோசித்துப்பார்—நீயோ வாலைப் பருவத்தினள்! நானோ இளங் காளை! நமக்குப் பருவத்துடிப்பு இருக்கத்தான் செய்கிறது! அந்த உணர்ச்சியின் வசத்திலே நாம் நம்மையும், நம் நிலைமையும், சமுகத்தையும் மறந்துவிடக்கூடாது. வாழ்க்கையைக் கானல் நீராக்க வேண்டாம், அல்லி :நான்போய் வருகிறேன்; இன்னும் இரண்டு நாட்களில் இந்த ஊரைவிட்டே போய்விடுவேன்! அப்போது நீயும் என்னை மறந்துவிடுவாய்—அல்லி என்னை மறந்துவிடு! அதோடு இச்சைகளைக் கிளரச்செய்யும் செய்தித்தாள்களையும் வார இதழ் களையும் மாத இதழ்களையும் மறந்துவிடு! மறைத்துவிடு! நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டு கண்களில் நீர்மல்க நான் திரும்பியும் பாராமல் வந்துவிட்டேன்.

அடுத்து இருந்த இரண்டு நாட்களும் நான் வெளியே எங்கும் போகாமல் வீட்டின் மூலையிலேயே அமர்ந்து வாழ்க்கையைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். என் தந்தை கூட "ஏன் வெளியில் போவதில்லை" என்று கேட்டார். நான், "சலிப்பு ஏற்பட்டு விட்டது, நாளைக்கே சென்னைக்குப் போய்விட வேண்டும்" என்றேன். தந்தையும் [சம்மதித்தார். இருவரும் மறுநாள் காலையே புறப்பட்டோம்! ஆனால் என் மனத்தில் ஏதோ ஒன்று உறுத்திக் கொண்டேயிருந்தது.

[அடுத்த இதழில் முடியும்]

4-ம் பக்கத் தொடர்ச்சி

பண்டிதர். இன்று, அதே பாகிஸ்தான் பிரதமருக்கு நேசக்கரம் நீட்டி விருந்தளிக்கிறார். சமஸ்தானங்களை எடுத்துக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்ட போது, [illegible] ஐதராபாத் நைசாம், இன்று டில்லியின் நண்பர்களில் ஒருவராக வாழுகிறார். இப்படி ஒருசமயம், நீதியை எதிர்த்தோர், அந்த நீதி எப்படியாவது வெற்றி பெற்றுவிடின், அதற்குப் பணிந்து நேசம்கொண்டு வாழ்வது உலக இயற்கை என்பதை நிகழ்ச்சிகள் பல சொல்லும்!!

எனவே, தேசிய எழுச்சிகொண்டு, 'திராவிட நாடு' வேண்டும் எனக்கூறும நமக்கு, இன்று எவ்வளவு எதிர்ப்புகள் காட்டப்படினும், எதிர்காலத்தில் நேசக்கரமும் அன்பு மொழியும் கிடைக்காமற் போகாது. அது கிடைக்கவேண்டுமாயின்,

**நமது சக்தி பலமுள்ளதாக வேண்டும் — எதாலும் தடுக்க முடியாது இந்த எழுச்சியை — என்று மாற்றார் உணரவேண்டும்.**

ஒன்பதாண்டுபோய், பத்தாவது வயது அரும்புகிறது, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு! இந்தச் சமயத்தில், கழகப் பொதுச் செயலாளர் அவர்கள், "நம்நாடு" இதழில், விடுத்துள்ள வேண்டுகோள், மேற்சொன்ன நிலை வளரவேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது.

கழகம் எப்படி அரும்பிற்று—எப்படியெப்படி வளர்ந்தது—இன்று எத்தகைய நிலையைப் பெற்றுள்ளது என்பதை நாடு அறியும். ஒரு விநாடி, கடந்து வந்த ஆண்டுகளைத் திரும்பிப் பார்த்தினன் புன்னகையும் பெருமூச்சும் நமக்கே ஏற்படும்.

வாலிபர்கள் நாம்! இளமைப் பருவத்தில் உள்ளது நமது கழகம்! பெரியவர்களின் அலட்சியம் தான், வழக்கமாக நமக்குக் கிடைக்கும் பரிசு!!— எனினும், உழைப்பையே ஊதியமாக வைத்து, உன்னதமான இலட்சியக் கோட்டையாகக் கழகத்தைக் கட்டிக்காத்து வருகின்றோம். நாமே, வியக்கின்ற அளவுக்கு, நாட்டவரின் உள்ளத்தில் எல்லாம் கழகக் கொள்கைகளைப் பதியவைத்து வருகின்றோம்.

இப்பணி,
இன்னும்,
சிறப்பாக,
அதிகமாக,
நடைபெறவேண்டும்!

இல்லந்தோறும் திராவிடர்தம் உள்ளந்தோறும்
கழகம் இடம்பெற வேண்டும்!

**விடுதலைபுரியின் தொண்டர்கள் நாம்— நமக்கு வேண்டிய, அடக்கம், ஊக்கம், தியாகஉணர்வு, மிக மிக அதிகம்!!**

**வளர்ப்போம்—**
**வளர்வோம்—**
**வெல்வோம்!!**


தி. மு. க. தலைமை நிலைய முதல் வெளியீடு!

# 'வளம் காண வழி'

## அண்ணாவின்

### அரிய கருத்துரை

சென்னை சட்டமன்றத்தில், 1958—59ம் ஆண்டின் வரவு செலவு பொது விவாதத்தின்போது ஆற்றிய பேருரைகளின் தொகுப்பு.

**இந்நூல்...................**

அரசியல் துறையினருக்கு அரிய விளக்கம் தரும் அறிவுக் களஞ்சியம்!

கொள்கை விளக்கப் பணியில் ஈடுபட்டுள்ள கழகத் தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய பெருந் துணைக் கருவி!!

## விலை 8 அணா

குறிப்பு:— தனிப்பிரதி வேண்டுவோர், புத்தக விலையுடன், 15-புதுக் காசுகள் அஞ்சல் செலவிற்காக, அனுப்பவும். 50-பிரதிகளுக்கு அதிகமாக வேண்டுவோர்க்கு 20-சதவிகிதம் கழிவு உண்டு. வி. பி. பி. இல்லை. தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

விவரங்களுக்கு:—

**தி. மு. க. தலைமை நிலையம் 'அறிவகம்'**
**சென்னை-13.**




# புதிய வேலை

—[*]—

## [இது, செய்தி]

"......இப்புதிய வேலைத் திட்டப்படி ஒவ்வொரு காங்கிரஸ்காரர்களுக்கும் 100 வீடுகள் ஒதுக்கப்படும். மண்டலப்பகுதியிலுள்ள 40 காங்கிரஸ்காரர்கள் 4 ஆயிரம் வீடுகளில் கவனம் செலுத்துவர். வீட்டிலுள்ள ஒவ்வொருவரையும் சந்தித்து காங்கிரசின் சாதனைகளை விளக்கி, தொடர்பு கொள்வர்......."

**தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்**

மதுரை—செப்,

"வாங்க! வாங்க!! ஏது, ஒவ்வொரு வீடா, நுழைஞ்சுகிட்டு வர்றீங்க..."

"எனக்கு நூறு வீடு ஒதுக்கியிருக்காங்க.........என்னைபோல மொத்தம் 40-பேர் இருக்கோம் இந்த மண்டலத்திலே...மொத்தம் 4000-வீடுகள் எங்கள் வசம் விடப்பட்டிருக்கு......இந்த நாலாயிரம் வீட்டையும் கவனிக்கிற பொறுப்பு எங்ககிட்டேயிருக்கு..."

"கவனிக்கிறதுன்னு எப்படீங்க.........?

"...எங்க காங்கிரஸ் சர்க்கார் செய்திருக்கிற சாதனைகளை ஒவ்வொருத்தருக்கும் புரியும்படியா விளக்கிறதும், தினசரி மக்களோடெ தொடர்புவைச்சிருக்கிறதும்தான் எங்கவேலை..."

"அதாவது பொதுக் கூட்டம் போட்டுப் பேசினா. கேட்க மக்கள் வரமாட்டேங்கிறாங்க. அதனாலே, ஒவ்வொரு வீடாப்போய் பிரசங்கம் செய்யணும்கிறது, ஏற்பாடு போலிருக்கு..."

"என்ன அண்ணாச்சி! பேச்சிலே கழக வாடை வீசுது..."

"ஏன்யா இயாகி! உண்மையைப் பேசினா அதுக்குக் கழக வாடைன்னு பேரா? தெரியாமத் தான் கேட்கிறேன், இத்தனை நாளுமில்லாமெ ஏன் இப்படி திடீர்னு வீட்டுக்கு வீடுபோய் காங்கிரசின் சாதனைகளைப்பற்றி எடுத்துச் சொல்கிறதுன்னு கிளப்பியிருக்கீங்க! காங்கிரஸ் ஏதாவது சாதிச்சிருந்தா, அது எங்களுக்கே புரியாதா.........இதை ஒருத்தர் எடுத்து விளக்கவா வேணும்? அவ்வளவு புத்தியில்லாதவங்களா, நாங்க!"

"அண்ணாச்சிக்குக் கோபம் வருதுபோலிருக்கு! அன்பு முக்கியம். அன்புதான் உலகத்தை வெல்லும்னு மகாத்மாகாந்தி கூடச் சொல்லியிருக்காரு. அந்த மகா உத்தமர் வளர்த்த கட்சி தான் காங்கிரஸ் கட்சி. அந்த அன்பு எங்கேயும் தழைக்கணும், உலவணும்னுதான் எங்க நேரு கூடப் பாடுபடுறாரு......"

"அதனாலேதான், சுதந்திரம் வந்த நாள்முதல், நாகர்களைச் சுட்டுக்கிட்டே யிருக்காங்கபோலிருக்கு பாகிஸ்தானுக்கிட்டே பாய்ஞ்சுகிட்டேயிருக்காங்க போலிருக்கு! ஏங்க..."



"கடிக்க வர்ற பாம்பை அடிக்காமெ யிருக்க முடியுங்களா?"

"பாம்பு விஷயத்திலே சரிய்யா! ஆறறிவுபடைச்ச மனிதர்களை, அன்பாலே, வாதத்தாலே வெல்லவா முடியாது? அதுபோகட்டும் உள்நாட்டிலேயே, ஒவ்வொரு மாதமும் எத்தனைபேரைச்சுட்டுத் தள்ளுது இந்த சர்க்கார்...... போனமாசம் சென்னைத் துறைமுகத்திலே ஆறு பேரை சுட்டாங்களே, அதுக்கு என்னய்யா சொல்றீங்க?"

"அண்ணாச்சி ரொம்பக் கோபமா யிருக்கீங்க போலிருக்கு! இன்னொரு சமயம் வர்ரேன்..."

* * *

"யாருங்க வீட்லே?"

"யாருய்யா கேட்கிறது! என்ன, என்ன விசயம்?"

"சகோதரி! நான் இந்த மண்டலத்துக் காங்கிரஸ் தொண்டன்... காங்கிரசின்சாதனைகளை உங்களிடமெல்லாம் எடுத்துச் சொல்லலாமென்று வந்திருக்கிறேன்... வீட்டில் ஒருவருமில்லையோ?"

"ஏன்யா! என்ன மோ, உன் கூடப் பொறந்தவளாட்டம் சகோதரின்னே—சரின்னு இருந்தேன் ...கடைசியிலே வீட்டிலே யாருமில்லியோன்னு வெறிக்கப் பார்க்கிறீயே... என்ன, ஒண்ணும் புரியலியோ?"

"அடடா! தவறாக எண்ணிவிட்டீங்க போலிருக்கு... சகோதரி... வந்து, ஒவ்வொரு வீடாகச் சென்று காங்கிரசின் சாதனைகளைப் பேசுவது என் போன்ற தொண்டர்களின் கடமை. காங்கிரஸ், ஒரு ஆலமரம்! அதுதான், இந்திய நாட்டின் ஏக விருட்சம்! இந்தியாவுக்கு, சுதந்திரம் அதனாலேதான் வந்துது! சுபீட்சம் வரப்போறதும் அந்த விருட்சத்தாலேதான்!!"

"யோ! என்னய்யா, ஆலமரம், விருட்சம் அப்படி இப்படீன்னு... சுருக்கமாச் சொல்லய்யா. எங் கேய்யா வந்தே? என்ன சொல்ல னும்கிறே?'

"வெள்ளைக்காரனை விரட்டிட்டு, நம்ப நாட்டுக்குச் சுயராஜ்யம் கொண்டாந்தது காங்கிரஸ்..."

"சரி!"

"சுயராஜ்யம் கொண்டுவந்தது மட்டுமின்றி, ஒவ்வொருவரும் சுகமா வாழனும்கிறதுக்காக ஐந் தாண்டுத் திட்டங்களைப் போட்டி ருக்காங்க..."

"சுகமா வாழ, அஞ்சாண்டு திட் டமா! ஏன் ஓராண்டு திட்டம்னு போட்டா என்ன..."

"அதாவது, ரஷ்யாவிலே போட்டமாதிரி இங்கேயும் போட் டோம்...... முதல் அஞ்சாண்டுத் திட்டம் முடிஞ்சி, இரண்டாவது திட்டமும் போட்டு வேலை செய் ரோம்..."

"யோ! சொல்லவந்ததை சுருக்க மாச் சொல்லிட்டுப் போய்யா...... அஞ்சு ஆறுன்னு என்னென் னமோ உளறிட்டு... போய் உலை வைக்கணும்... நேரமாச்சு..."

'வீட்டிலே பால் பொங்கணும்! குடும்பத்திலே சுகம் பொங்கணும்! எல்லாரும் சுகமாக வாழணும்! இதுக்காகவே, பாடுபட்டுக்கிட்டு வருது காங்கிரஸ் சர்க்கார்......... தாயில்லாதவங்களுக்குத் தாய் மாதிரி, தகப்பனில்லாதவங்களுக் குத் தகப்பன் மாதிரி, இருக்கிறது நம்ம சர்க்கார்... இதை நீங்க புரிஞ் சிக்கணும்......எலெக்ஷன் வரும் போது ஓட்டுப்போடணும்..."

"சர்க்கார் அனுப்பிச்ச ஆளா! ஐயா, புண்யவானே...... இதைப் பார்த்தியா... என்ன இது?

"அரிசி!"

"ஒருபடி அரிசி...என்ன விலை தெரியுமா? ஒரு ரூபா!! என் புருசனுக்கு நாள் முழுசும் உழைச் சாக் கிடைக்கிறது முக்கால் ரூபா தான்...ஒரு நாளைக்கு என் குடும் பத்துக்கு 2-படி அரிசி தேவைப் படுது......பணம் இல்லாமெ பட்டினியா கிடக்கிறோம்......ஒரு வேளை தான் சரியாச் சாப்பிடுறோம் ........ரூபாய்க்கு மூணுபடி அரிசி கிடைக்குமாய்யா! கிடைக்குமா!!"

"கிடைக்கும்...கிடைக்க வேண் டும் என்பதற்காகத்தான் காங் கிரஸ் சர்க்கார் பாடுபட்டுக்கிட்டு இருக்கு..."

"ரூபாய்க்கு மூணுபடி அரிசி கிடைக்குமா! இந்தா, கூடை...... இந்தா ஒரு ரூபா......போய் உங்க சர்க்காரைக் கேட்டு மூணுபடி அரிசி வாங்கிட்டு வந்து கொடு... எங்கே பார்க்கலாம், போ..."

* * *

"ஐயா! அம்மா!!......யாருமில் லியா வீட்டிலே... அம்மா! ஐயா!!"

"செச்சே! பிச்சைக்காரங்க பெருத்துப் போயிட்டாங்க கொசு மாதிரி...பிச்சைப்போட ஒண்ணு மில்லே...போ, போ..."

"ஐயா, நான் பிச்சைக்கார னில்லே! கொஞ்ச நேரம் பேசி கிட்டுப் போகலாம்னு வந்தேன்! கொஞ்சம் வெளியே வர முடியுங் களா?"

"அடடே! மண்டல காங்கிரஸ் தொண்டர் மாரிமுத்தா? யாரோன்னு நினைச்சேன்! வா, வா ...உட்காரு......என், என்னமோ போலிருக்கே......"

"நூறு வீட்டிலே நாலு வீடு தான் ஆச்சு! இன்னும் தொண் ணுத்தாறு வீடுபார்க்கணும்......"

"ஏன்? வீட்டையேன் பார்க் கணும்"

"வீட்டைப்பார்க்கலே......ஒவ் வொரு வீட்டிலேயிருக்கிறவங்களை யும் தனித்தனியா சந்திச்சு, காங் கிரசின் சாதனைகளை விளக் கணும்னு முருமுடிவு செஞ்சிருக் காங்க......விளக்கிட்டு வர்ரேன் ......"

ரொம்பச் சிரமமான வேலைதான்! மக்கள், சொன்னதும் புரிஞ்சுக்கு வாங்களே............" புரிஞ்சிக் கிறதா? அண்ணே! உன்கிட்டே சொன்னால் என்ன......ஒரு பொம் பிளை கூடையை தூக்கிக் கொடுத் தாங்க... ஒரு நெசவாளி சிலந்தி கூடு கட்டியிருக்கிற தறியைக் காட்டி, அடிக்கவே வந்துட்டாரு ......ஒரு விவசாயிகிட்டே போய் 'காங்கிரஸ்!'ன்னு ஆரம்பிச்சேன்... 'போறியா இல்லியான்னு' பாஞ் சாரு.............வியாபாரிகிட்டே போனேன்; கடைக்குள்ளே ஏறவே விடலே, என்னை! ரொம்பத் தொல் லையாயிருக்கண்ணே இந்த வேலை!!"

"அவ்வளவு கஷ்டமாயிருந்தா விட்டுடுறதுதானே—..."

"சுலபமாச் சொல்லிட்டீங்க! மாதா மாதம் 40, 50-ன்னு பணம் தந்தாங்களே.......வேலையில்லாத இந்தக் காலத்திலே, இந்த வேலை யையும் விட்டுட்டு என்னண்ணே செய்றது......"

"அப்ப, கூலிக்குத்தான் மாரடிக் கிறேன்னு சொல்லு!"

"வெளியிலே சொல்லாமா... வர்ரேன்......ஜே இந்த......வந்தே பார்க்ரோம்......"

✽

**பல்லவி**

இனி ஒரு தொல்லையும் இல்லை!-பிரி
வில்லை குறையும் கவலையும் இல்லை-இனி.

**ஜாதி**

மனிதரில் ஆயிரம் சாதி-என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்பு வதில்லை!
கனிதரு மாமரம் ஒன்று-அதில்
காய்களும் பிஞ்சும் கனிகளும் உண்டு;
பூவில் உதிர்வதும் உண்டு-பிஞ்சைப்
பூச்சி அரித்துக் கெடுவதும் உண்டு;
நாவிற் கினியதைத் தின்பர்-அதில்
நாற்பதி னாயிரம் சாதிகள் சொல்லார்.
ஒன்றுண்டு மானிடச் சாதி-பயின்
றுண்மைகள் கண்டவர் இன்பங்கள் சேர்வார்
இன்று படித்து நாளை-உயர்ந்
தேற்றம் அடையும்; உயர்ந்தது இழியும்
நந்தனைப் போல் ஒரு பார்ப்பான்-இந்த
நாட்டினில் இல்லை! குணம் நல்ல தாயின்,
எந்தக் குலத்தின ரேனும்-உணர்
வின்ப மடைதல் எளிதெனக் கண்டோம்.

—பாரதியார்.

# மக்களின் தேவை

[10—9—'58 அன்று சட்ட மன்றத்தில் சி. என். ஏ. உணவுப்பிரச்னை குறித்து ஆற்றிய உரையின் பகுதி.]

"நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாகச் சொல்வேன் — நாள் ஒன்றுக்கு மூன்று வேளைச் சோறு மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும் ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி விற்கப்பட வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்கள் அவர்கள் கட்டுக்கு அடங்கிய விலையில் தரப்படவேண்டும். எந்த இடத்தில் நிலம் இருக்கிறதோ, அந்த இடத்திற்கு உரம் தரப்பட வேண்டும். இப்பொழுது உரம், இலாபவேட்டைக்காரர்களின் உள்ளக் குளிர்ச்சிக்காகத் தரப்படுகிறதே தவிர, நிலத்திற்குத் தரப்படவில்லை.

பல உறுப்பினர்கள் இன்றைய தினம் உரம் கள்ள மார்க்கெட்டுக்குத்தான் விற்கப்படுகிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாற்றுயோசனை என்ன என்று சர்க்கார் எங்களைத் திருப்பிக்கேட்கலாம். கார்டு, கவர் விற்கப்படுவதைப்போன்று—கொய்னா மருந்து விற்கப்படுவதுபோன்று, தபால் இலாகா மூலம் அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்கள், எந்த எந்த விவசாயி கேட்கிறானோ, அவனுக்குத்தான் நேரிடையாகக் கொடுப்பது என்று வைத்துக்கொள்ளலாம். இந்த யோசனை சிறுபிள்ளைத்தனமானது என்று தோன்றினால்—அவர்களுக்கு இருக்கக்கூடிய நிறைந்த அனுபவத்தைக்கொண்டு வேறு ஏதாவது நல்ல முறைகளை அவர்கள் கையாளலாம். ஆனால் இன்று இருக்கிற முறை விவசாயிகளுக்குத் தேவையான உதவியை அவ்வப்போது அளிக்கக் கூடியதாய் இல்லை. அவர்களது நல்வாழ்வுக்குப் பயன் அளிப்பதாய் நாட்டின் உணவு உற்பத்திக்கு அடிகோலியிருப்பதாய்த் தெரியவில்லை.

விவசாயத்திற்கு அதிகமாகப் பயன்படுகிற இயந்திரங்களுக்கு உபயோகிக்கும் டீசல் எண்ணெய்க்கு வரி போடுகிற நேரத்தில், இந்த வரி, விவசாயத்தை மிகவும் பாதிக்கக்கூடியது என்கிற விஷயத்தைப்பற்றிப் பல கட்சிகளைச் சார்ந்தவர்களும் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு இந்தப் பிரேரணையை ஆதரித்தார்களே தவிர, பேசும்போதெல்லாம் —இந்த வரி குறைக்கப்பட வேண்டும்; நீக்கப்படவேண்டும்; போக்கப்பட வேண்டும் — என்று பலமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கூறியவை எல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் காதில் ஏறுமல்போனதுபோலவே தான், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சொன்னதெல்லாம் கூட கனம் அமைச்சர் அவர்களுடைய ஒரு காதின் வழியாக ஏறி மறு காதின் வழியாக வெளியே போய் விட்டது.

உழுபவனுக்கே நிலம் என்று இவர்கள் சொல்லுகிறார்களே, நிலத்தின் உச்சவரம்பைக் கட்டுப்படுத்தப்போகிறோம் என்று பேசி வருகிறார்களே, ஒன்றும் திட்டவட்டமாக, அவர்கள் எதுவும் பேசாத — கொள்கையை வகுக்காத காரணத்தினால், அதன் விளைவு எப்படி இருக்குமோ என்கிற ஐயப்பாட்டினால்—நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவைகளைத் தரிசாகப்போட ஆரம்பித்துவிட்டார்கள். விவசாய உற்பத்தியில் ஊக்கம் காட்டுவதற்குப் பதிலாக ஊக்கம் குன்றிபோய் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர்கள் உணராமல் இருக்க முடியாது.

★

## வயலுக்குப் போ!

வயலிலே இறங்கி மந்திரிகள் வேலை செய்யவேண்டும்! — என்று கம்போடிய அரசாங்கம், இந்தக் கிழமை முடிவெடுத்துள்ளது.

ஒரு ஆண்டில், ஒரு மாதமாவது இப்படிச் செய்யவேண்டும்!! — என்று, புதனன்று கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில், முடிவு செய்யப்பட்டது. சீனாவுக்குச் சென்று திரும்பிய பிரதமர் நாரோடாம் சிகனுக், தெரிவித்த யோசனையின் பேரிலேயே இவ்விதம் முடிவு செய்திருக்கிறார்கள்.

மந்திரிகள் மட்டுமின்றி, உயர்தர சிவில் அதிகாரிகளும், ஒரு மாத காலம் இப்படி உழைக்க வேண்டுமாம்.

இராணுவத்தினர் இருக்கிறார்களே! — அவர்களும், வயற்புரம் போய், கட்டாயமாக ஒருமாத காலம் உழைக்க வேண்டும்.

கழனிகளின் அருமைகளையும், விவசாயிகளின் பிரச்னைகளையும் அப்போதுதான் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும் என்பதாலேயே இந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுப்பிரயாணம் போவதிலும், கட்சிப்பிரசாரம் செய்வதிலும், கண்டபடி பிற கட்சிகளைத் திட்டுவதிலும் காலம் கழிக்கும் காங்கிரஸ் மந்திரிகள் இப்படிச் செய்வார்களா! முன்வருவார்களா!!

### திருத்தம்

14—9—58-ல் வெளியிடப் பெற்ற "துறவு" என்ற கட்டுரையில் "மாயா தேவி" என்றிருப்பதை "யசோதரை" என்று திருத்திப்படிக்கவும்.

SUNDARAM STORE